விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 06 வெள்ளிக்கிழமை (19.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ரா ம் கோ
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அதிர்ச்சி கொடுக்கும் மின் கட்டண உயர்வு!

சராசரியாக 65% அதிகரிப்பு

**இலங்கையில் மின்சாரக் கட்டணங்கள் சராசரியாக 65 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த கட்டண அதிகரிப்பின் காரணமாக சாதாரண பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.**

இதன்படி 120 கிலோவாற் மின்சார பயன் பாட்டுக்காக மாதக் கட்டணம் ரூ.1500 செலுத்தி வந்த ஒருவர் புதிய விலையின் கீழ் ரூ.2500 செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

தாம் கேட்டிருந்த புதிய மின் கட்டணங் களுக்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சபைக்கு நேற்று முன்தினம் அனு மதி வழங்கியது.

ஏப்ரல் 12ஆம் திகதி முதல் இந்த புதிய விலைகளின் கீழ் மின் கட்டணங்கள் வசூலிக் கப்படவுள்ளன என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

முழுக்க முழுக்க அரசநிறுவனமாக இயங் கு கின்ற இலங்கை மின்சார சபைக்கு ரூ.5 ஆயி ரம் கோடி நஷ்டம் உள்ளது.

இந்த நஷ்டத்தை குறைக்க மின் கட்ட ணங்களை உயர்த்த வேண்டியது அவசிய மாகிறது என சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பெருமளவான மின் உற் பத்தி நிலக்கரியைக் கொண்டும், டீசலைக் கொண்டுமே நடப்பதால், நீர் மின் உற்பத்தி முறைபோல் (19ஆம் பக்கம் பார்க்க)

## எதிரிய மின்கட்டண விபரம்

மின்சாரக் கட்டணங்களை ஏப்ரல் 12-ம் திகதி முதல் அதிகரிப்பதற்கு மக்கள் பயன் பாட்டு ஆணைக்குழு மின்சார சபைக்கு நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் வங்கி களுக்கு வழங்கவேண்டிய பாரிய கடன் என்பவற்றால் இந்த வருடத்தில் ஏற்படும் பாரிய நிதி நெருக்கடியை குறைப்பதற்காக கட்டண உயர்வு மேற்கொள்ள மின்சார சபை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் அனு மதி கோரியிருந்தது. பயன்பாட்டு ஆணைக்குழு வும் சிறு திருத்தங்களுடன் கட்டண உயர்விற்கு அனுமதி நேற்று முன்தினம் வழங்கியது.

புதிய கட்டண மாற்றத்தின்படி:

முதல் 30 அலகுகளுக்கான கட்டணம் 3 ரூபாயிலிருந்து 5 ரூபாயாகவும், 0-60 வரை யான அலகுகளுக்கான கட்டணம் 4 ரூபா 70 சதத்தில் இருந்து 6.00 ரூபாயாகவும், 0-90 வரையான அலகுக் கட்டணம் 7 ரூபா 50 சதத்திலிருந்து 8 ரூபா 50 சதமாகவும் அதிகரிக் கப்பட்டுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

# மின் கட்டண உயர்வை மக்கள் ஏற்கக் கூடாது

## ஜே.வி.பி. கோரிக்கை

புதுவருடத்தில் நல்ல நேரத்தைப் பார்த்து வேலைகளை ஆரம்பித்த அரசாங்கம், முத லில் மின்சாரக் கட்டணங்களை அதிகரித்து மக்களுக்கு மின்சாரத்தைப் பாய்ச்சியதாகவும் மக்கள் குறித்து சிந்திக்காத இந்த அரசாங் கத்தைத் தோற்கடிப்பதற்காக மக்கள் வீதியில் இறங்க வேண்டும் எனவும், ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அதிகரித்துள்ள இந்த மின் சாரக் கட்டண உயர்வை மக்கள் ஏற்றுக் கொள் ளக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த ஒரு மாதமாக மின்சாரக் கட்டணங் களை அதிகரிப்பது குறித்து பல்வேறு கதை களை பேசி வந்த அரசாங்கம், இறுதியாக மின்சார கட்டணங்களை அதிகரித்துள்ளது. மக்களுக்கு சுமையைக் கொடுக்காத வகை யிலேயே மின்சாரக் கட்டணத்தை அதிகரிக் கப் போவதாக (19ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு தேர்தல் திகதி உரிய நேரத்தில் அறிவிப்பு

## – அரசாங்கம்

(கொழும்பு)

வடக்கில் அரசாங்கத்தின் தேர்தல் பிர சாரம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தேர் தல் இடம்பெறும் காலம் குறித்து உரிய நேரத் தில் அறிவிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாள ருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகத்துறையின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாரா ந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறி விக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இன்னமும் பிரசார நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்படவில்லை. இலங்கையில் ஊடகங்கள் தாக்கப்படுவது அரசாங்கத்தின் செயற்பாடல்ல. அவ்வாறான தாக்குதல் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அது தேர் தல் பிரசாரங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

# அல்-கொய்தாவா? அமெரிக்கா அறிவிக்கவில்லை

## – ஹெகலிய



(கொழும்பு)

இலங்கையில் அல்-கொய்தாவின் நடவடிக்கை குறித்து எம்மிடம் அமெ ரிக்கா இதுவரை உத்தி யோகபூர்வமாக எதுவும் அறிவிக்க வில்லை என ஊடகத் துறை அமைச்ச ரும் அமைச்சர வைப் பேச்சாளரு மான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகத்துறையின் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாரா ந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறி விக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கையிலும் பங்களாதேஷிலும் அல்-கொய்தாவின் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் ஆயுதம் ஏந்த இன அழிப்பே காரணம்

## டென்மார்க்கில் கஜேந்திரகுமார் உரை

தமிழர்கள் மீதான இன அழிப்பின் கார ணமாகவே தமிழர்கள் ஆயுதத்தை ஏந்த வேண்டிய சூழ்நிலை உருவானதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள் ளார்.

இலங்கைத் தீவில்; மனித உரிமை என்ற மாநாடு நேற்று டென்மார்க் நாடாளுமன்றத் தில், டென்மார்க்கின் ஆளும் கட்சியும் மற் றும் டெனிஸ் தமிழ் அமைப்புக்களின் ஒன் றியத்தினதும் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் இன அழிப்புக்கு எதிராக ஓங்கி ஒலித்த குரல் களின் மத்தியில், இந்த நிகழ்வில் பேச்சாளர் களாகப் பங்குபற்றிய டென்மார்க் நாடாளு



மன்ற உறுப்பினர்கள், சர்வதேச சுயாதீன மான விசாரணையை ஒருமித்த குரலில் வலியுறுத்தினார்கள். இதற்காக டென்மார்க் தன்னாலான சகல வழிகளிலும் முயற்சிக் கும் எனவும் (19ஆம் பக்கம் பார்க்க)

# கோத்தபாய திங்கள் யாழ். விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ எதிர்வரும் 22-ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

சாவகச்சேரியிலுள்ள 52-வது படையணி தலைமையகத்தில் அன்றையதினம் மாலை நடைபெறும் வைபவத்தில் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்கள் 1500 பேருக்கு அப் பியாச கொப்பிகள் (19ஆம் பக்கம் பார்க்க)

# குடும்பஸ்தரைக் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அவரது மனைவியால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நல்லூரைச் சேர்ந்த கணேஸ் மகேந் திரன் (வயது-52) என்ற குடும்பஸ்தரே கடந்த 12 ஆம் திகதி முதல் காணாமல் போயு ள்ளார்.

காணாமல் போனதாகக் கூறப்படும் நபர் கடந்த 12-ம் திகதி அரியாலைக்குச் செல்வ தாகக் கூறிவிட்டு (19ஆம் பக்கம் பார்க்க)

# வெப்பமான காலநிலை தொடரும்!

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை மே மாத நடுப்பகுதி வரை தொடரும் என கால நிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இடைக்கிடை மழை பெய்யுமெனவும் ஆனால் பொதுவாக வெப்பம் மற்றும் வரட்சியான காலநிலையே நிலவும் என நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேகங்களின் அடர்த்தி குறைந்துள்ளமை, காற்று வீசுதல் குறைந்துள்ளமை போன்ற காரணத்தினால் சூரிய ஒளி நேராக புவியில் விழுவதாகவும் இதனால் வெப்பக்காற்று உரு வாகுவதுடன் புவியின் மேற்பரப்பை சூடாக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

### சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



## Personal & Group Class

வங்கியியல் கற்கை நெறி CBF யாழ், கிளி, முல்லை மாவட்டங்களில் கற்பிக்கப்படும்.

தொடர்பு :- 077 35 86 563

S.Sathees

(2402)



## கிராம சேவகர் போட்டிப் பரீட்சை

### விசேட வகுப்புக்கள்

சுப்ரா சித்தன்கேணியில் தினமும் மாலை 5.00 – 7.30 மணி வரை. ஆரம்பம் சனிக்கிழமை 5.00 மணிக்கு

நெல்லியடியில் Sigma Solution
184/6, பிரதான வீதி, நெல்லியடி
திங்கள் 3 மணிக்கு

தொடர்புகளுக்கு : 077 41 64 564

(C-3046)



## டோஹா, கட்டாரில் (Doha, Qatar) உடனடி வேலைவாய்ப்பு

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர் வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹேட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (LL. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165

தலைமை நிறுவனம் : Air Trust
Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8
011 2676777, 077 2393165

(C-3041)



## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

கோப்பாய் லயன்ஸ் கழகம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நடத்திய அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 2850 |
| 2 ஆம் பரிசு | 1767 |
| 3 ஆம் பரிசு | 2673 |

தொடர்புகளுக்கு : செயலாளர், லயன்ஸ் கழகம், கோப்பாய்.
0777 280 885

(C-3047)


## வடக்கு சிறுவர் இல்லங்களில் 4 ஆயிரம் சிறுவர்கள் தங்கவைப்பு

(யாழ்ப்பாணம்) போர் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் சுமார் 4 ஆயீரம் சிறுவர்கள் வடக்கு மாகாணத்தில் சிறுவர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இலங்கையில் உள்ள சிறுவர் இல்லங்களில் 25 வீதம் வடக்கு மாகாணத்தில் உள்ளது என வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர் செல்வி உமா தங்கவேல் தெரிவித்தார்.

இலங்கையில் 352 சிறுவர் இல்லங்கள் உள்ளதாகவும் அதில் வடக்கு மாகாணத்தில் மட்டும் 70 இல்லங்களில் 4 ஆயிரம் சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு பதிவு செய்யப்படாது இயங்கிவரும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் வடக்கில் 80 வீதம் சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (செ–11)

## கிளி. கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(கிளிநொச்சி) கிளிநொச்சி கல்வி வலயத்திற் குட்பட்ட கிளி/முழங்காவில் ம.வித்தி 1 ஏபி பாடசாலையினது அதிபர் பதவிக்கு வட மாகாணத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2–I, 2–II, III ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் கிளிநொச்சி வலயத்திலும் பார்வையிட்டு, அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் மே மாதம் 6–ம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (அ)


## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை ...




கட்டணங்கள் (1 Kg) இற்கு
லண்டன் 1400 /-
கனடா 2500 /-
விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு
சுவிஸ் 7800 /-
அவுஸ்திரேலியா 5500 /-
ஜேர்மனி 5500 /-
சாதாரண சேவை 1 Kg இற்கு கனடா 700 /- Uk 600 /-
(பொதிகள் நிறை 5 Kg இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள வியாபார ஸ்தானங்களில் பொதிகளை ஒப்படைக்கலாம்.

| | |
|---|---|
| தெல்லிப்பளை :- | Telli group 077 1616 195 |
| இணுவில் :- | Shanthini net com 021 224 1388 |
| தாவடிச்சந்தி :- | Star Net 021 235 3020 |
| சுன்னாகம் :- | Ram Net com 021 321 5253 |
| நெல்லியடி :- | மருதம் கொமினிகேஷன் 021 226 3210 |

(C-3042)

குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/c, Non A/c அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels 30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021 221 9596, 077 87 10 732



## CANADA வில் குடும்பத்துடன் நிரந்தரமாக வசிப்பதற்குரிய VISA ஒழுங்குகள்

### தகைமைகள்

University Degrees :- PHD, MA, MSC, BA, BSC
ONE YEAR WORK EXPERDENCE
G.C.E. O/L, G.C.E. A/L :- Condition Apply
Newzealand :- G.C.E O/L உடன் உயர்கல்வி மூன்று வருட முடிவில் நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக்கொள்ளலாம்.



குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/C, Non A/C அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளிற்கு :-
Rainbow Travels
30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9596, 077 89 80 652

(C-3043)




உ

சிவமயம்

அந்தியுள் மந்திரம் அஞ்ச எழுதுமே
**ஓம் நமசிவாய**
தந்தையார் போயினார் தாயரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல்கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம்
வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுது உய்யலா (ம்)
மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே

# மரண அறிவித்தல்

## திருமதி நமசிவாயம் இராசம்மா

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் இராசம்மா 15.04.2013 திங்கட்கிழமை அன்று பூதவுடல் நீங்கி புகழ் உடம்பெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (K.K.K) சுந்தரம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நமசிவாயம் (இளைப்பாறிய பணிப்பாளர், கைத் தொழில் அமைச்சு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான வாலாம்பிகை, தனலட்சுமி, பத்மநாதன், சண்முகநாதன், பேரின்பநாயகம், (K.K.K.P) மற்றும் சிவபாலன் (K.K.K) சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், சதாசிவம், இராமநாதன், வெற்றிவேலு, தம்பிமுத்து, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் Dr. தியாகலிங்கம், Dr. சத்தியலிங்கம், Dr. பொன்மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி, இராசேந்திரா, ஆகியோரின் மாமியும் இஷானி, மயிலோன், சுருதி, சுரபி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தீக்கடன் 21.04.2013 லண்டனில் நடைபெறும். (North East Surrey - Crematorium) இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(218-Hamilton Avenue North - Clteam Surrey SM 3 & DT U.K.

நமசிவாயம் குடும்பத்தினர், பொன்னவளை வீதி, களபூமி, காரைநகர்.

Dr. திய்யாகலிங்கம் : 07979770005
Dr. சத்தியலிங்கம் : 09492933605
Dr. பொன்மலர் : 07815767683

தகவல்: க.கு.க.சிவபாலன் (K.K.K)
50/16, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777866527


சைவக்களஞ்சியம்



கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக்குருக்கள் அவர்களின்

## சைவக்களஞ்சியம்

### நூல் வெளியீட்டு விழா



இடம்
வியாவில் ஐயனார் தேவஸ்தானம் காரைநகர்
காலம்
20.04.2013 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி
தலைவர்
உயர்திரு ப.விக்னேஸ்வரன்
(உதவிச் செயலாளர் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்)
தேவாரம்
வரவேற்புரை
க.சோமசேகரம் - J.P
(அறங்காவலர், ஐயனார் தேவஸ்தானம்)
நூல்வெளியீடு
கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்கள் (நூல் ஆசிரியர்)
முதற் பிரதி பெறுபவர்
இ.ச.பே.நாகரத்தினம் (தொழிலதிபர், யாழ்ப்பாணம்)
வெளியீட்டுரை
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நூல் ஆய்வுரை
கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு
(ஓய்வுநிலை விரிவுரையாளர் கோப்பாய் அரசினர் ஆசிரியர்கலாசாலை)
நன்றியுரை
எஸ்.சுந்தரதாசன்
குறிப்பு
சைவக்களஞ்சியம் பிரதி ஒன்றின் உற்பத்திச் செலவு 1500 ரூபாய். இந் நூலை சிறப்புப் பிரதியாகப் பெற்றுக்கொள்ளும் நீங்கள் வழங்கும் மேலதிகமான பணம் முழுவதும் ஆலயத்தினால் மேற்கொள்ளப் பட்டு வரும் அறப்பணிகளுக்கும், திருப்பணிக்கும் செலவிடப்படும்.

ஐயனார் தேவஸ்தானம் வியாவில்

க.சோமசேகரம் – J.P அறங்காவலர்

(C-3044)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அத்வைதம்

ஒரு ஊரிலே முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்.

ஒரு சமயம் அந்த முனிவர் வெளியே எங்கேயோ கிளம்பிப் போனார். மீண்டும் ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் திரும்பி வந்தார்.

அது எப்படி ஆயிரம் வருடங்கள் கடந்த நிலை... என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு எல்லாம் இது சகஜம்.

ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் அவர் திரும்பி வந்ததனால் சிஷ்யருக்கு தனது குருவை அடையாளம் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார்.

"பசிக்கிறது... சாப்பாடு போடு"என்று முனிவர் கூறினார்.

உடனே அந்த சிஷ்யர் மனைவியிடம் பக்குவமாகக் கூறி, சாப்பாடு போட்டார். அவரும் சாப்பிட்டு முடித்தார்.

"என்ன... திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார் சிஷ்யர்.

உடனே முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்" என்றார்.

சிஷ்யருக்கோ எதுவுமே புரியவில்லை; அமைதியாக நின்றார்.

பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்; அதன்பின் முனிவர் சொன்னார்; "இப்போது சாப்பிட்டது நான் இல்லை" எனது தேகம்... அதனாலே தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா. எனக்கு அதிலே திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார் முனிவர்.

இதைக்கேட்டதும் அந்த சிஷ்யருக்கு இதுதான் நம்முடைய குரு என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரது காலிலே விழுந்து வணங்கினார்.

அதன்பின் அந்த முனிவர் வெளியே சென்று விட்டு ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் திரும்பி வந்தார்.

அவர் திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கையில், அந்தச் சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை தலையிலே வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருந்தார். முனிவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நிற்கி றீர்கள்" என்று கேட்டார்.

"ராஜா யானை மேலே அமர்ந்திருந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அந்த வேடிக்கையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

இதிலே யார் ராஜா? எது யானை? என்று கேட்டார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைப் பார்த்து விளக்கம் கொடுத்தார்.

"அதாவது மேலே இருக்கிறவர்தான் ராஜா... கீழே இருக்கிறது யானை"என்றார்.

"அது சரி... "மேலே" என்று சொல்வது, என்றால் என்ன? "கீழே" என்று சொல்வது என்றால் என்ன? என்று முனிவர் கேட்டார்.

உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாத்தாவி அந்த முனிவரின் தோளின் மேலே அமர்ந்து கொண்டார்.

அமர்ந்து கொண்ட அவர்; "மேலே", "கீழே" என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்– என்றார்.

முனிவர் அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"அது சரி! நான் "மேலே" நீ "கீழே" என்று சொல்லுகிறாய். நான் யார்? நீ யார்?" என்றார்.

அப்போதுதான் இவருக்கு, தன்னுடைய குரு என்பது தெரிந்தது. உடனே காலிலே விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக ஜகடபாதர் அரசர் ரகுகுணனுக்கு எடுத்துக்கூறிய கதை இது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு அமெ.வுக்கு பாடம் புகட்டுங்கள்

## அமைச்சர் விதாரண கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவின் 20 வீத நிதி குறைப்பானது இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதால் அது குறித்து அஞ்சத் தேவையில்லை என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரியால் முன்மொழியப்பட்ட இந்த யோசனை நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல என்று இலங்கையின் எதிர்க்கட்சிகளும் பொருளாதார நிபுணர்களும் சுட்டிக் காட்டினாலும் அதை ஏற்றுக்கொள்ள அரசு மறுத்து வருகிறது.

இந்நிலையில் இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகளை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ள விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் இந்த செயற்பாடு தவறு என்பதை சர்வதேச சமூகத்திற்கு தமது செயற்பாடுகளின் ஊடாக அரசு எடுத்துரைக்க வேண்டும்.

ஜெனீவா தீர்மானம் உட்பட சில முக்கிய விவகாரங்களால் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் அண்மைய காலமாக உரசல்கள் ஏற்பட்டு வரும் நிலையில் இலங்கைக்கான நிதியுதவிகளை அமெரிக்கா 20 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் நிதிகுறைப்பு நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

அமெரிக்காவின் நிதி குறைப்பு செயற்பாட்டால் அச்சமடைய தேவையில்லை. அவர்களின் செயற்பாடு பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது. அதேவேளை அமெரிக்காவின் இந்தப் செயற் பாடு தவறு என்பதை இல ங்கை அரசு சர்வதேச சமூ கத்துக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அவசரமாகக் கூட்டி தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதனூடாக எம் மால் சர்வதேசத்துக்கு நல்லதொரு செய்தி வழங்கக் கூடியதாக இருக் கும். எனவே இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ விதா ரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறுப்புத் தெரிவிக்கின்றதே என அமைச்சரிடம் கேட்டபோது கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என நாம் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம். கூட்டமைப்பு வர மறுப்பதன் காரணமாகத்தான் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமல் உள்ளது. தெரிவுக்குழுவுக்கு கூட்டமை ப்பு கட்டாயம் வர வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடாகும் என்றார்.

அப்படியானால் அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த விடயம் சம்பந்த மாக கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவார்களா எனக்கேட்கப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு இதற்கு என்னால் உடனடியாகப் பதிலை வழங்க முடியாது.

எது எப்படியிருப்பினும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வர வேண்டும் எனத் தெரிவித்தார். (அ-2)

# வேட்பு மனு தாக்கல்

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு கோரப்பட்டுள்ளது. இவ்வேட்பு மனு நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவிலும் வேட்பு மனுத் தாக்கல் இடம் பெறவுள்ளது.

வேட்பாளர்களுக்கான நிபந்தனைகளாக இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் செயற்குழு உறுப்பினராகவும் ஒவ்வொரு இளைஞர் கழகத்தினுடைய தலைவராகவும் இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-37)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 |
| கோவா | 60 | 50 | 80 |
| கரட் | 120 | 100 | 150 |
| பூசணி | 60 | 30 | 60 |
| புடோல் | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 100-140 | 140-160 | 60-160 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | .60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 150 | 150 |
| பீற்றூட் | 80 | 30 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 600 |
| போஞ்சி | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 20-25 | 20 |
| தேசிக்காய் | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# இராசி பலன்

*19.04.2013*
*(சித்திரை 06, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு*
*நவமி பின்னிரவு 3.35 மணிவரை*
*பூரம் பிற்பகல் 3.16 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*ஸ்ரீராம நவமி*

**மேடம்** வாகன சுகமுண்டு, சுபகாரியங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், போசன நன்மையுண்டு, நண்பர்கள் மூலம் சில தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** சகோதர ஒற்றுமை பலப்படும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத்தில் சிலரைத் திருப்திப் படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பீர்கள்.

**கடகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும்.

**சிங்கம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சில ஆதாயமும் கிடைக்கலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நிலையுண்டு.

**கன்னி** தொழில் வருமானம் அதிகரிக்கும், குடும்பத்தில் உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். பொது வாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயர்வடையும்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் உற்சாகம் தென்படும், நண்பர்கள் வலிய வந்து உதவுவர்.

**விருச்சிகம்** தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும், பெரியவர்களின் உதவிகள், ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும், பொருளாதார நிலையில் மந்த நிலை காணப்படும், போசன சுகமுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மகரம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், போசன நன்மையுண்டு.

**கும்பம்** ஆரோக்கியமான நாள், செய் தொழில் விருத்தியுண்டு, உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவி செய்யும் சிந்தனை மேலோங்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்யத் தடை விதிப்பு

## வலி.மேற்கு தவிசாளர் அறிவிப்பு


சங்கானை நகர மைய பகுதியில் அதிகரித்த போக்குவரத்தினால் விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வியாபார நிலையங்கள் முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி ஐங்கரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை பொது இடங்களில் கழிவுகளை போடுவது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில், வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லைகளுக்குள் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்வதோ அல்லது கழிவுகளை போடுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

அதை மீறுவோர் மீது பிரதேச கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்தோடு எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமாக செயற்பாடுகளுக்கு முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விடயங்களை அனைத்து தரப்பினரும் கவனத்தில் எடுத்து பொதுமக்கள் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)



நன்றி: அததெரண

# ஜனாதிபதி விஜயம் செய்தால்தான் வீதிகளை புனரமைப்பீர்களா?


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் கேள்வி

**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதி வந்தால் மட்டும்தான் வீதிகள் புனரமைப்பு செய்யப்படுமா எனவும் வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்துவதிலும் மின்சாரம் வழங்கப்படுவதிலும் பாரபட்சம் காட்டப்படுவது ஏன் எனவும் நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மக்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். நல்லூர் பிரதேசசெயலக பிரிவு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெனின் தலைமையில் இடம்பெற்றது. இதில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.**

மின்சாரம் தொடர்பாக ஆராயப்பட்ட போது கிழக்கு அரியாலையைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் எழுந்து மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்தார்.

அரியாலை கிழக்கு பகுதியில் நீண்ட காலமாக பிரதான வீதி புரனமைப்பு செய்யப்படாமல் உள்ளது. ஆனால் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டவுடன் இங்குள்ள பிரதான வீதிகள் குறிப்பாக அவர் பயணம் செய்யும் வீதிகள் காப்பெற்றிடப்பட்டு அழகுபடுத்தப்படும். ஆனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இவ்வீதி மிகவும் மோசமடைந்து காணப்படுகிறது.





எனவே அவ் வீதியை புனரமைத்து போக்கு வரத்தை இலகுபடுத்த வேண்டும்.

மேலும் கிழக்கு அரியாலை பகுதிக்கு மட்டும் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. வீதி விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளது எனப்பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

இதனைவிட யாழ். மாநகரசபைக்குட்பட்ட அரியாலை ஆனந்தன் வடலி வீதி, நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் பொற்பதி வீதி, ஜே/89 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட உதயபுரம் கடற்கரைவீதி, ஜே/99 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பொன்னையா வீதியின் உபவீதிகள் என்பனவும் பிடாரி அம்மன் கோவில் வீதி போன்றனவும் புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்களினால் குற்றம் சாட்டப்பட்டதோடு வீதி திருத்தப் பணிகளில் பண மோசடி இடம்பெறுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

மக்களின் இவ்வாறான குற்றச்சாட்டையடுத்து ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அலென்டின் கருத்து தெரிவிக்கையில்,

இங்கு புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளதாக மக்களினால் சுட்டிக்காட்டப்பட்ட சகல வீதிகளும் புனரமைப்பு செய்யப்படும் என்ற வாக்குறுதியை வழங்க முடியாது. முன்னுரிமை அடிப்படையில் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. எதிர் காலத்தில் இந்த வீதிகளும் புனரமைப்பு செய்யப்படும் என்றார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த யாழ். மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் என்பன மக்களின் கோரிக்கையை ஏற்று வீதி புனரமைப்பை விரைவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இது தவிர யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆனால் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட தபால் பெட்டிச் சந்தி போன்ற பிரதான வீதிகள் மற்றும் முக்கிய இடங்களில் கூட மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என மின்சாரசபை அதிகாரிகளிடம் வினவினார்.

இதன்போது மின்சார சபையின் யாழ்ப்பாணம் பிரதேச மின் அத்தியட்சகர் அருள்தாஸ் கருத்து தெரிவிக்கையில்,

அதாவது யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்துவதற்கும் மின்சாரம் வழங்குவதற்கும் மாநகரசபைக்கும் மின்சாரசபைக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டு வீதி விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

அத்தோடு மின்விளக்குகள் உள்ளிட்ட பொருட்களும் மாநகரசபையினால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய சபைகள் மின்சாரசபையுடன் எந்தவிதமான தொடர்பினையும் ஏற்படுத்தவில்லை.

இதனால் வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை என்பன தடைப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்தகுமார் தனது கருத்தினைக் கூறினார். நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் சுமார் ஆயிரத்து 500 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏனைய இடங்களுக்கும் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இவ்வாறு நேற்றைய கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-6)




# துடுப்பாட்ட போட்டிக்கு பதிவினை மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் யாழ். மாவட்டத்திலான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் மே மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக 10 பந்து பரிமாற்றங்களை கொண்ட 11 பேர் பங்குபற்றும் இத்துடுப்பாட்டப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டு கழகங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தம்மிடம் பதிவினை மேற்கொள்ளுமாறு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக செயலாளர் பகீரதன் தெரிவித்துள்ளார்.

மேலும் மேலதிக தகவல்களை பெற விரும்புவோர் 0774740667 என்ற செயலாளரின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிகளில் கால்நடைகள்

(புளியம்பொக்கணை)

மாங்குளம் சந்தியில் இருந்து மல்லாவி நோக்கி செல்லும் பிரதான வீதிகளில் இரவு வேளைகளில் கால்நடைகளின் தொல்லை அதிகரித்து வருவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மல்லாவி நகர்ப் பகுதியில் வன்னி விளாங்குளம்,மூன்று முறிப்பு சந்தி ஆகிய இடங்களிலேயே இக்கால் நடைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் வெகுவாக அதிகரித்து வருவதைக் காணக்கூடிய உள்ளது.

இவ்விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ-3-263)

## மகாபாரதம் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம் வீதி அருள் மிகு ஞான வைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் அலங்கார உற்சவம் தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் வழங்கும் மகாபாரம் எனும் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (அ-5)

# தனியார் பேருந்து கட்டண அதிகரிப்பு போராட்டம் ஜீலை வரை ஒத்திவைப்பு

தனியார் பேருந்து கட்டணத்தை ஜீலை மாதம் வரை அதிகரிக்காதிருக்கவும் அதுவரை பேருந்துக் கட்டண உயர்வுகோரி எந்தவித தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடாதிருக்கவும் இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் 7 வீத கட்டண உயர்வு வழங்கினால் அதனை ஏற்பதில்லையெனவும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

டீசல் விலையுர்வையடுத்து பேருந்து கட்டணங்களை அதிகரிக்குமாறு தனியார் பேருந்து சங்கங்கள் கோரியிருந்தன. இதன்படி ஏப்ரல் முதல் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்பட இருந்ததோடு அது தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. பேருந்து கட்டணம் அதிகரிக் கப்படாததற்கு எதிராக பேருந்து சங்கங்கள் முன்னர் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்திருந்தன.

ஆனால், நேற்று முன்தினம் காலை கூடிய தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க நிறைவேற்றுக்குழு ஜீலை வரை கட்டண உயர்வு கோருவதில்லை என முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு வருடமும் ஜீலை மாதத்தில் அமுல்படுத்தப்படும் தேசிய பேருந்து கட்டணக்கொள்கைப்படி டீசல் விலையேற்றம், மின்கட்டண உயர்வு என்பவற்றின் அடிப்படையில் 7 வீதத்தை விடக்கூடுதலாக பஸ் கட்டணம் உயர்த்தப்படவேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

அரசாங்கம் 7 வீதத்தினால் பஸ் கட்டணத்தை அதிகரித்தாலும் நாம் அதனை ஏற்கப்போவதில்லை. தங்களுடைய முடிவு குறித்து ஜனாதிபதிக்கும் நிதி அமைச்சிற்கும் தனியார் போக்குவரத்து அமைச்சிற்கும் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து வினவியதற்குப் பதிலளித்த அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர, பேருந்து சங்கத்தின் முடிவு எழுத்து மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கட்டணத்தை உயர்த்தாதிருக்க பேருந்து சங்கம் முடிவு செய்துள்ளதை வரவேற்கிறோம்.

ஆனால், டீசல் விலை உயர்விற்கேற்ப பஸ் கட்டணத்தை உயர்த்துவதா இல்லையா? என்பது குறித்தும் கட்டண உயர்வு தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பது தொடர்பிலும் அமைச்சரே முடிவு செய்வார் என்றார். (அ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அ.எ.ஞானஜோதி தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரையும் நல்லூர் குறுக்குத்தெரு சந்தியிலும் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரையும் கோவில் வீதியில் அமைந்துள்ள கைலாயப்பிள்ளையார் கோவிலடியிலும் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி.வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரையும் வைமன் வீதியுள்ள எடிசன் அக்கடமியின் அருகாமையிலும் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரையும் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள ஜே/105 கிராம சேவகர் அலுவலகத்திலும் மேற்படி விலங்கு விசர்நோய் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)


Soft View Computer Center

கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புகள்
புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
இரவு நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன
8.30 am -8.30 pm
102, Main Street, Jaffna. E.C. Colin
T.P: 021 222 4885, 0779053545
(யாழ்.திருமறைக் கலாமன்றம் அருகாமையில்)



## தேவை

- மேசன் (Masons)
- கம்பி வளைத்து கட்டுபவர் (Bar Benders)
- முட்டுவேலை தச்சுத்தொழிலாளர் (Shuttering Carpenters)
- தச்சுத் தொழிலாளர் (Carpenters)

மேற்குறிப்பிட்ட துறைகளில் முன்னனுபவம் உள்ளவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

இல.45,
காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-3039)



## நன்றி மறவோம் என்றென்றும்

முப்பது வருட காலத்திற்கு மேலாக ஒளியின்றித்தவித்த இரணைமடு, திருவையாறு அம்பாள் நகர் மக்களுக்கு **மின் ஒளி** வழங்குவதற்கு முழுமையான ஏற்பாடுகளைச் செய்துதவிய எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கு எமது பிரதேச மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



**இரணைமடு கிராம
அபிவிருத்திச் சங்கம்,
வில்சன் வீதி,
கிளிநொச்சி.**

(சி-3038)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 3<br>உயரம்: 5'9"<br>கி.பா: 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L, வியாபாரம் (வாகனங்கள் வாங்கி விற்பது)<br>தொ.இ: B -1651 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 5'3"<br>கி.பா: 42<br>தகைமை/ தொழில்: BSc, MSc விஞ்ஞான ஆராய்ச்சியாளர்<br>தொ.இ: G -1659 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 21<br>தகைமை/தொழில்: A/L கடை (UK PR)<br>தொ.இ: B -1652 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'1"<br>கி.பா: 33.25<br>தகைமை/ தொழில்: முகாமைத்துவ பட்டதாரி (பயிலுநர்) MBA (வங்கி உத்தியோகத்தர்)<br>தொ.இ: G-1664 |
| பிறப்பு: 1982 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூசம் 2<br>உயரம்: 5'3"<br>கி.பா.: 21.75<br>தகைமை/ தொழில்: A/L, Graphic Designer<br>தொ.இ: B -1654 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'1"<br>கி.பூா: 21.5, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, BA Accounts Assistant<br>தொ.இ: G -1666 |
| பிறப்பு: 1963 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 23, 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, தாதியர் (அரச)<br>எ.பா.: சைவபோசனம்<br>தொ.இ: B -1655 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 153 cm<br>கி.பா: 52<br>தகைமை/ தொழில்: BA Dip.in Public Administration<br>தொ.இ: G -1667 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயத்தின் தமிழ்த் தினப்போட்டி முடிவுகள்

(சித்தன்கேணி)

வலிகாமம் கல்வி வலய தமிழ்மொழித் தினப் போட்டி முடிவுகளை வலிகாமம் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**வாசிப்பு- பிரிவு I**

ந.சுவர்ணானா (யா/அருணோதயாக் கல்லூரி), ம.மேரி நிஷானா யா/மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க.பா.),பா.தீபனா (யா/மல்லாகம் விசாலாட்சி வித்தி

**பிரிவு II**

லி.தீபிகா (யா/மகாஜனாக் கல்லூரி), க.கேணுகா (யா/ அராலி சரஸ்வதி மகா வித்தி), சி.சுபநிதா (யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு-பிரிவு I**

க.ஜீர்த்திகா (யா/ஏழாலை ம.வி), பெ.கஜானி (யா/நவாலி சென்.பீற்றர்ஸ் வித்தி.), கு.ஜனார்த்தனி (யா/இணுவில் மத்திய கல்லூரி)

**பேச்சு -பிரிவு I**

வி.துஷன்ஜா (யா/மகாஜனாக் கல்லூரி), அ.அனோஜா வெல்ஸ் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), ர.நிசாந் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**பிரிவு II**

அ.மேரிலக்சிகா (யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.), ஜெ.நிதுஷாரன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), ர.கிருத்திகாயினி (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

**பிரிவு III**

அ.ரூபகன் (யா/இளவாலை புனித ஹென்றிரசர் கல்லூரி), ஜெ.விநோதினி (யா/வட்டு மத்திய கல்லூரி), தி.சாருகா (யா/உடுவில் மகளிர் கல்லூரி)

**பிரிவு IV**

ப.குருபரேசன் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), க.குகவர்மன் (யா/மகாஜனாக் கல்லூரி), இ.இனோசா (யா/அருணோதயாக் கல்லூரி)

**பிரிவு V**

அ.சாம்பவி (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), சி.அனுசியா (யா/வட்டு இந்துக் கல்லூரி), (இருவர் மூன்றாமிடம்) கு.தயாளினி (யா/இணுவில் மத்திய கல்லூரி), கி.விஸ்ணுகா (யா/மகாஜனாக் கல்லூரி)

**பாவோதல்- பிரிவு I**

ந.அபிராமி (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.), தெ.சோபனா(யா/மகாஜனாக் கல்லூரி), (இருவர் மூன்றாமிடம்) ப.பிரவீணன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி),கு.அபினா (யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தி

**பிரிவு II**

வி.டிலக்சனா (யா/மல்லாகம் ம.வி.),க.வித்தகன் (யா/மகாஜனாக் கல்லூரி), ஈ.கனிஸ்டா (யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி

**பிரிவு III**

லோ.சிறிகர்ஷன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), ச.நிரோஜா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தி.), இ.துஸ்யந்தன் (யா/வட்டு.மத்திய கல்லூரி)

**பிரிவு IV**

மு.சுதர்சினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.கமி (யா/இராமநாதன் கல்லூரி), அ.அஜந்தினி (யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா.)

**பிரிவு V**

து.யமுனாமலர் (யா/யாப்பாணக் கல்லூரி), சி.கௌசிகா (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), இ.ஜெனார்த்தனி (யா/யூனியன் கல்லூரி)

**இசையும் அசைவும்-பிரிவு I**

ர.மேரி துஷாந்தி (யா/மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க.பா.), த.சரண்யா (யா/இளவாலை கனனியர்மடம் ம.வி.), கு.நிசாந்தினி (யா/மல்லாகம் விசாலாட்சி வித்தி.)

**இசை தனி பிரிவு II**

க.சியாமளன் (யா/விக்ரோறியாக் கல்லூரி), உ.ஹனுசியா (யா/இராமநாதன் கல்லூரி), அ.தோமஸ் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி)

**பிரிவு III**

பி.மிதுலா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.யதுர்சன் (யா/விக்ரோறியாக் கல்லூரி), கு.குணசர்மிலா (யா/இராமநாதன் கல்லூரி)

**பிரிவு IV**

த.பவதாரணி (யா/யூனியன் கல்லூரி), ப.சாரங்கன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி), சி.கில்மீயா (யா/இராமநாதன் கல்லூரி)

**பிரிவு V**

அ.சண்முகப்பிரியன் (யா/யூனியன் கல்லூரி), பா.டெசிந்தா (யா/விக்ரோறியாக் கல்லூரி), கி.கதீஜா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**இசை குழு- குழு I -**

யா/உடுவில் மகளிர் கல்லூரி, யா/யாழ்ப்பாணக் கல்லூரி), யா/மகாஜனாக் கல்லூரி

**குழு II**

யா/இராமநாதன் கல்லூரி), யா/யாப்பாணக் கல்லூரி), யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**நடனம் தனி-பிரிவு II**

வி.சதுர்ஜனா (யா/இணுவில் மத்திய கல்லூரி), ச.வேணுமிதா (யா/யூனியன் கல்லூரி), பா. சானுஜா (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

**பிரிவு III**

அ.வாகீஸ்வரன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), (இருவர் இரண்டாமிடம்) சி.தர்மிகா (யா/விக்ரோறியாக் கல்லூரி), ஜெ.ஜெனார்த்தனி (யா/மகாஜனாக் கல்லூரி)

**பிரிவு IV**

வி.சுசந்திகா (யா/மகாஜனாக் கல்லூரி), ஶ்ரீ. கிருஸ்ணப்பிரியா (யா/வயாவிளான் ம.ம.வி .), சி.சிவாநந்தி (யா/விக்ரோறியாக் கல்லூரி)

**பிரிவு V**

ஜெ.ஆதித்தியா (யா/இணுவில் மத்திய கல்லூரி), இ.தேவிகா (யா/விக்ரோறியாக் கல்லூரி), சி.சுகன்யா (யா/இராமநாதன் கல்லூரி)

**குழு I நடனம் குழு**

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/இராமநாதன் கல்லூரி, யா/சுதுமலை சின்மய பாரதி வித்தி.

**திறந்த போட்டி- நாட்டிய நாடகம்**

யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/இணுவில் மத்திய கல்லூரி, யா/இணுவில் இந்துக் கல்லூரி

**நாட்டார் பாடல்**

யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., யா/மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க.பா., யா/வட்டு மத்திய கல்லூரி

**மேடை நாடகம்**

யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யா/இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி, யா/யூனியன் கல்லூரி

**வில்லுப்பாட்டு**


யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/யூனியன் கல்லூரி

**விவாதம்**

யா/மகாஜனாக் கல்லூரி, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, யா/இணுவில் மத்திய கல்லூரி

**திறந்த போட்டி- தமிழறிவு வினாவிடை**

யா/மகாஜனாக் கல்லூரி, யா/விக்ரோறியாக் கல்லூரி, யா/இராமநாதன் கல்லூரி. (அ-17)



இராஜேஸ்வரி அறக்கட்டளை நிலையத்தினால் ஜே/97 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட கிராம சேவகரினால் பரிந்துரை செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிற்கு துவிச்சக்கர வண்டி தையல்இயந்திரம் மற்றும் பண உதவி என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

இதன்போது செ.இராஜேஸ்வரி பயனாளி ஒருவருக்கு உதவி தொகையினை வழங்கி வைப்பதையும் அறக்கட்டளை நிலைய இயக்குநர் செ.திருமாறன், இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் வேதநாதன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அனைத்துலக விசாரணை வேண்டும்! டென்மார்க் சபையில் ஒலித்த குரல்கள்



இலங்கைத்தீவில் இடம்பெற்ற சர்வதேச சட்டமீறல்கள், இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக சுதந்திரமான அனைத்துலக விசாரணை இடம்பெற வேண்டுமென ஒருமித்த குரலில் பங்கெடுத்துக் கொண்டிருந்த பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

டென்மார்க் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் மறக்கப்பட்ட மோதுகை என்னும் கருப்பொருளில் இடம்பெற்றிருந்த இலங்கைத் தீவில் மனித உரிமை எனும் மாநாடொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற சபாநாயகரும் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான மோனென்ஸ் லுக்கரொப்ற் உரையாற்றுகையில்,

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தாலும் இனப்பிரச்சினை தொடர்கிறது. தமிழ மக்களுக்கு நீதி வழங்குவதற்கான கடப்பாடு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கம் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கிறது. இதற்கான பொறிமுறைகளுக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது. இதற்கு இந்தியா தனது பங்களிப்பை எதிர்காலத்தில் வழங்கும் என நம்புகிறோம். இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய நண்பர்களுடன் இணைந்ததன் விளைவாக சீனாவின் மேலாண்மை இலங்கையில் அதிகரித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் சீனாவின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள துறைமுகம் இதன் சாட்சியாக உள்ளது. அதேவேளை சீனாவுடன் எமக்குள்ள உறவை பயன்படுத்தி சீனா இலங்கை தொடர்பான கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக பரிசீலிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சின் பிரதிநிதியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்த மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். (அ-2)

# சவுதி இலங்கையர்களுக்கு தற்காலிக வேலை வழங்கல்

## அரசாங்கம் அறிவிப்பு

சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பின்றி தங்கியுள்ள இலங்கை யர்களுக்கு தற்காலிக வேலைவாய் ப்புக்களை வழங்க சவுதி அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பணிமனை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பல்வேறு தேவைகளுக்காக சவுதி சென்ற நிலையில் நாடு திரும்பாமல் ஆயிரக்கணக்கான இலங்கையர் கள் அங்கு தங்கியுள்ளனர். அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

எனினும் இந்தப் பணிகள் நிறைவடையும் வரையில் அவர்களுக்கு தற்காலிக தொழில் வாய்ப்புக்களை வழங்க சவுதி அரசாங்கம் நடவடி க்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

ஞா. டொறின் டௌசியா -6ஏ2பி, தெ.அபிசா-5ஏ4சி, இ.சுஜந்தன்- 5ஏ2பிசிஎஸ், க.பானுஜன்- 4ஏ3பிசி.

**யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி**

பா.விசாகன் -7ஏபிஎஸ் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையுடன் போராடினால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும்

## காங்கிரஸ் தலைவர் அருள்தாஸ்

ஈழத்தமிழ் மக்களுக்காகத் தனித்தனியாகப் போராடுவதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் போராடினால்தான் ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிட்டும் என தமிழக முன்னேற்ற காங்கிரஸ் தலைவர் அருள்தாஸ்தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழ மக்களின் இனப்படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்துநேற்றுகாலைசென்னை சேப்பாக்கத்தில் உண்ணாவிரதப்போராட்டம்நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்துகூறுகையில்,

ஈழத்தமிழர்களின் உயிரை காக்கவும் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கேட்கவும் தமிழ் ஈழம் மலர்வதற்கு ஐ. நா. பொது வாக்கெடுப்பு நடத்தவும் தமிழ் இனத்தை அழித்த இலங்கை மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்திய அரசை வலியுறுத்தி தமிழக முன்னேற்ற காங்கிரஸ் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளது.

தமிழ் ஈழ மக்களுக்காக மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் போராடி வருகிறார்கள். இவர்கள் தனித்தனியாக போராடுவதால் எந்த பலனும் இல்லை. அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் போராடினால்தான் ஈழ தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். ஆகவே தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்களை ஒன்றிணைத்து ஒற்றுமையுடன் போராட நாங்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

இந்திய விடுதலைக்காக காந்தியடிகள் தலைமையில் நம் முன்னோர்கள் போராட்டம் நடத்தி பிரிட்டிஷ் அரசை எப்படி பணிய வைத்தார்களோ அதுபோல தமிழகத்தில் தமிழக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தி இந்திய அரசை பணிய வைத்தால்தான் தமிழ் ஈழம் மலருமே தவிர வேறு எதனாலும் நம் இனத்தை அழிவில் இருந்து தடுக்க முடியாது என்றார். (அ-2)

# அமெரிக்காவின் பிரேரணைகளை நிராகரிக்கக்கூடாது-ருவான் எம்.பி

ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை அரசாங்கம் நிராகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறியதன் மூலம் நாட்டை இரண்டாக பிரிக்க சர்வதேசம் எடுக்கும் முயற்சிகளை தடுக்க முடியாது போகும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட யோசனையில் நாட்டில் நீதியை முன்னெடுத்து செல்லுதல், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சிறந்த விடயங்களே முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனை அரசாங்கம் நிராகரித்துள்ளதன் மூலம் மக்களிடம் இருக்கும் நீதிமன்றம் தொடர்பான நம்பிக்கை இல்லாமல் போகும். பல நாடுகள் இணைந்து நிறைவேற்றிய இந்த யோசனையை நிராகரிப்பதானது அந்த நாடுகளை பகைப்பது போன்ற நடவடிக்கையாகும்.

நாட்டில் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையில் நாடு இரண்டாக பிளவுபடுவதை தடுக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# சூதாட்டக்காரர் 30 பேர் கைது

சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 30 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 10 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டாகம பிரதேசத்தின் இரண்டு இடங்களில் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்கம மற்றும் கன்கமுவ ஆகிய இடங்களில் சூதாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் ஹொரண நீதிமன்றில் ஆஜர் செய்ய படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பதில் தலைவராக பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக சிசிர ஜயவிலால் ஆப்றூ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டார். (அ-2)

# புகலிடக்கோரிக்கையாளர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஆசியோ விளக்கம்

(கொழும்பு)

புகலிடக்கோரிக்கையாளர்கள் ஏன் தேசியக் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக திகழ்கின்றனர் என்பதற்கு அவுஸ்திரேலிய பாதுகாப்புப் பிரிவான ஆசியோ விளக்கம் அளித்துள்ளது.

காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள சில புகலிடக் கோரிக்கையாளர்கள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய் நாட்டில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் வன்முறைகளில் ஈடுபட்டமைக்கான சாட்சியங்கள் காணப்படுவதாகவும் மெல்போர்னில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சில இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக புகலிடக் கோரிக்கையாளர்கள் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் ஆசியோ ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாளர் களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

ஓர் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வன்முறையின் மூலம் இலங்கையின் தனி இராச்சியமொன்றை அமைக்க முயற்சிப்பதாக ஆசியோவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2009 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர் பேரவையின் ட்ரவர் கிராண்ட் தெரிவித்துள்ளார். (அ-2)

# மினி சூறாவளி

கஹட்டகஸ்திகிலியவில் வீசிய மினி சூறாவளியில் சுமார் 75 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த வீடுகளின் கூரைகளே காற்றில் அள்ளுண்டு சென்றுள்ளன.

இதனால் சிலருக்கு சிறு சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை மரக்கிளைகள் முறிந்து விழுந்தமையினால் அந்த பிரதேசத்தில் மின்சாரம் மற்றும் நிலையான தொலைபேசி சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# கணனி வகுப்புக்கள் ஆரம்ப நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் அனுசரணையுடன் கல்வி முன்னேற்றக்கழகம் வழங்கும் இலவச கணனி வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர் சுதர்சிங் விஜயகாந்த் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினர்களாக மரியன்னை பேராலய பங்குதந்தை ஆர். எக்ஸ். சகாயநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ஈ.பி.டி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழு தலைவர் இரா. செல்வவடிவேல், குருநகர் இராணுவ உயர் அதிகாரி பி.எம். ஜெகத் சந்திர சிறி சிசிரகுமார, பாரதி சனசமூக நிலைய தலைவர் எம்.அன்ரனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# இந்திய கடற்படைக்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்



பயிற்சி நடவடிக்கைகளுக்காக இந்திய கடற்படைக் கப்பல்கள் 3 கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இரு தரப்பு கடற்படையின் கூட்டுறவின் அடிப்படையில் இந்த கப்பல்கள் கொழும்பிற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.என். என்.எஸ். சுஜாதா ஐ.என்.எஸ். தரங்கினி மற்றும் ஐ.சீ.ஜீ எஸ். வருணா ஆகிய கடற்படை யுத்தக் கப்பல் களே இவ்வாறு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த கப்பல்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் எனவும் இருதரப்பு பயிற்சி நடவடிக்கைகளும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# முஸ்லிம்கள் பொறுமை காக்க வேண்டியது காலத்தின் தேவை- அமைச்சர் அதாவுல்லா

(கொழும்பு)

முஸ்லிம்கள் பொறுமை காக்க வேண்டும். இது காலத்தின் அவசிய தேவையாகும் என்று உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி சபைகளின் சில கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

அவ்வாறான கட்டடங்களை நாம் இனங்கண்டு புதிய கட்டடம் நிர்மாணிக்க நிதியுதவி வழங்கி வருகின்றோம்.

தேர்தல்காலங்களில்ஏதோ ஒரு விடயத்தை கையில் எடுத்துக் கொண்டு பற்றி எரிகிறது என்று சொல்லிக் கொண்டு உங்கள் வாக்குகளைப் பெற வேறு ஒரு கூட்டம் வரும். அவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள். கட்டடங்களையும் அபிவிருத்திகளையும் மேற்கொள்ள நாம் இருக்க வேண்டும். மக்கள் நிதானமாக சிந்திக்க வேண்டிய காலம் இது.

தலைவர்கள் என்பவர்கள் சமூகம் பிழையாக நடந்தாலும் சமூகத்தினை வழி நடத்த வேண்டியவர்கள். சமூகத்தின் உணர்வுகளை அடக்க வேண்டியவர்கள்.

ஆகவே எந்தெந்த இடத்தில் இறுக்கமாக பிடிக்க வேண்டும். எந்த இடத்தில் மெதுவாகப் பிடிக்கவேண்டும் என அறிந்து அங்கெல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நடந்து மக்களை சரியாக வழி நடத்துபவர்கள்தான். உண்மையான தலைவர்கள்.

ஓர் அரசியல் தலைமை ஒரு நடவடிக்கையில் ஈடுபட முன் அதன் சாதக, பாதகங்களை எண்ணவேண்டும். அதனை விடுத்து இவ்விடயத்தை வைத்து வாக்குகளை நாம் அதிகரிக்கவேண்டும் என்று எண்ணக்கூடாது. அது உயிருள்ளதாக அமையாது. மக்களுக்கு செய்யும் துரோகம் அது.

எப்போதும் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். பள்ளிவாசல்களில் தொழும் போது சுஜித்திலும், ருக் ஊவிலும் சஹிதாக்கப்பட்டிருக்கின்றோம். இதனை பார்க்கவும் உணர்ச்சிவேறொன்றிலும் வர முடியாது.

முஸ்லிம் சமூகமான நாம் வரலாற்றில் எதிர் கொண்ட கசப்பான விடயங்கள் இவை. இன்று பல கோணங்களிலிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான பல விடயங்கள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. இவைகளை ஒரு சாரார் தூண்டுகின்றனர். பத்திரிகைகளும் இதனைக் குழப்புகின்றன.

முஸ்லிம்கள் தனிக் கலாசாரத்தைக் கொண்டவர்கள். அவர்களுடைய பாதை தனித்துமானது, முஸ்லிம்களின் உடைதனித்துவமானது, உணவு தனித்துவமானது என்பதனை இன்று எல்லாசமூகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஏன் அண்மையில் சம்பந்தன் ஐயா கூட பாராளுமன்றத்தில் பேசியிருக்கின்றார்.

முஸ்லிம்கள் தனிக் கலாசாரத்தைகொண்டவர்கள்என்று ஏற்கனவே கூறியது அதுவல்ல. இஸ்லாமியத் தமிழர்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்று சொல்கிறார்கள் முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள் என்று. தற்காலப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களும் இப்போது இதனை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஒரு பிரச்சினை உருவாகித்தான் முஸ்லிம்களைப் பற்றி ஏனைய சமூகத்திற்கு தெளிவு வருகின்றது. கலகம் பிறந்துதான் நியாயம் பிறக்கும்.

இப்போது முஸ்லிம்கள் தனித்துமானவர்கள் என்ற விடைபிறந்திருக்கின்றது. இவைகளைப் பற்றி நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

நாம் சமூகத்திற்காக எதனையாவது இழந்து எதையாவது பெற வேண்டும் என்றிருந்தால் அதில் உண்மைக்கு உண்மையான நியாயம் இருந்தால் எதனையும் இழந்து நம் சமூகத்திற்கு நியாயத்தை பெற அதாவுல்லா தயாராக இருக்கின்றான். எனவே முஸ்லிம்கள் பொறுமை காக்க வேண்டும். அதுதான் எமது பிரதான ஆயுதம். பிரச்சினைகளை உரிய முறையில் நாங்கள் அணுகிக் கொண்டிருக்கின்றோம். நிச்சயம் தெளிவு பிறக்கும் எனவும் அமைச்சர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

432

## தன்வினை தன்னைச் சுடும்



சசி மிகவும் சாமர்த்தியமான வியாபாரி. அவனுடைய கிராமத்தில் அவன் ஒருவன்தான் தேங்காய் விற்றதால் எல்லோரும் அவனிடம்தான் தேங்காய் வாங்க நேரிட்டது. அதைப் பயன்படுத்தியும் பல வியாபாரத் தந்திரங்களினாலும் அவன் தேங்காய் வியாபாரத்தை அமோகமாக நடத்திக்கொண்டிருந்தான். சசி தன் மகன் சந்திரனையும் தன் வியாபாரத்தில் ஈடுபடுத்தி பயிற்சியளிக்கத் தொடங்கினான்.

ஒருநாள் நகரத்தில் தேங்காய் விலை மிகவும் மலிந்துபோக சசி ஒரேயடியாக இரண்டாயிரம் தேங்காய்கள் வாங்கிவிட்டான். அப்பா! என்ன இது! இந்த மாதத்தில் பண்டிகைகளே கிடையாது. மலிவாக கிடைத்தது என்று ஒரேயடியாக தேங்காய்களை வாங்கித் தள்ளி விட்டீர்களே, இவை விலை போகுமா? என்று சந்தேகத்துடன் கேட்டான்.

மகனே தேங்காய்க்கு கிராக்கியை உண்டாக்கி அத்தனையும் விற்கிறேன் பார்! என்று சசி சவால்விட்டான். சிறிது நேரத்தில் கடைக்கு சுகுணா எனும் வாடிக்கையாளர் வந்து சசி ஒரு தேங்காய் கொடு என்றாள்.

உடனே சசி ஒன்று போதுமா? கண்திருஷ்டி பூஜைக்கு மூன்று தேங்காய் வேண்டுமே! என்றான்.

உடனே சுகுணா நான் சட்னிக்காக ஒரு தேங்காய் கேட்டேன். ஆனால் இது என்ன கண்திருஷ்டி பூஜை? நான் கேள்விப்பட்டது இல்லையே என்றாள்.

அடடா உங்களுக்கு நிஜமாகவே தெரியாதா? என்று கண்களை அகல விரித்து மிகவும் அதிசயப்படுபவன் போல் நடித்த சசி நகரத்தில் இந்தபூஜை திமிலோகப்படுகிறது. உங்கள் புருசன் மேல் எத்தனைபேர் திருஷ்டி போட்டிருப்பார்கள். அந்தத் திருஷ்டியைக் கழிக்கத் தான் இந்த பூஜை! உங்கள் புருசனுக்கு மூன்று தேங்காய்களை திருஷ்டி சுற்றியபின் தெருவில் அதை உடைக்க வேண்டும் என்றான்.

இதுபற்றி உனக்கு முன்னமே தெரியுமா என்று சுகுணா கேட்டாள்.

ஒ தெரியுமே! நம்ம பக்கத்து கிராமத்து ஜோஸ்யர் சுப்பா சாஸ்திரி சொன்னார். நம்ம ஊரிலேயே நிறையப்பேர் வாங்கிச் சென்றிருக்கிறார்கள். நீங்கள் இப்படி யோசித்தால் பின்பு எல்லாத் தேங்காயும் விற்றுவிடும் என்றான் சசி.

## அம்புலிமாமா கதைகள்

உடனே சுகுணா அவசர அவசரமாக மூன்று தேங்காய்களை சசி சொன்ன விலைக்கு வாங்கிச் சென்றாள்.

அப்பா! சுப்பா சாஸ்திரி உங்களிடம் எப்போது இதைப் பற்றிச் சொன்னார்? என்று கேட்டான் சந்திரன்.


சுப்பா சாஸ்திரியாவது, சுப்பா சாஸ்திரியாவது! பெண்களுக்கு மூடநம்பிக்கை அதிகம்! இப்படி நாமாக ஏதாவது புரளியை ஏற்படுத்திவிட்டு வியாபாரத்தைப் பெருக்கவேண்டும்.

நீயே பார்! இந்த சுகுணா ஊர்முழுவதும் கண்திருஷ்டி பூஜையை பற்றித் தம்பட்டம் அடித்துவிடுவாள் என்றான் சசி. அப்பா இவ்வாறு பொய்யான செய்தியைப் பரப்புவது தப்பில்லையா என்றான் சந்திரன். சும்மாயிருடா இதற்கு பெயர் பொய் இல்லை, வியாபாரத் தந்திரம் என்றான் சசி.


சசி எதிர்பார்த்தபடியே சுகுணா ஊர் முழுவதும் தம்பட்டம் அடிக்க சசிக்கு காலணா செலவில்லாமல் விளம்பரமும் கிடைத்தது. வியாபாரமும் ஆகியது.

எல்லாப்பெண்களும் வரிந்து கட்டிக்கொண்டு வந்து சசியின் கடையை முற்றுகையிட்டு பேரம் பேசாமலேயே தேங்காய் வாங்கிச் செல்ல மாலைக்குள் அத்தனையும் விற்றுவிட்டது. சசிக்கு அடித்த இலாபம் இரண்டாயிரம் ரூபாய்.

மனங்கொள்ளா உற்சாகத்



துடன் சசி வீடு திரும்பினான். அவன் மனைவி சுமதி வழிமேல் விழிவைத்து அவனுக்காகக் காத்திருந்தாள். அவனும் பிள்ளையும் வந்ததும் சுமதி, என்னங்க! விற்காமல் மிஞ்சிய காய்களில்



மூன்று கொடுங்கள் என்றாள்.

அடி போடி பைத்தியக்காரி! ஒரு தேங்காய்கூட மிஞ்சவில்லை. எல்லாம் விற்றுவிட்டது. இலாபம் மட்டும் இரண்டாயிரம் என்றான் சசி.

அடடா கண் திருஷ்டி பூஜை செய்யலாம் என்று நினைத்தேன். ஒரு தேங்காய்கூட மிஞ்சவில்லையா! என்று சுமதி வருத்தப்பட சசி விழுந்து விழுந்து சிரித்தான்.

பைத்தியமே அதையும் நீயும் நம்பினாயா என்றான்.

போகட்டும் எல்லாம் இந்த தாயத்தின் மகிமை! இதை வாங்கிய அன்றே உங்களுக்குக் கடையில் கொள்ளை இலாபம் என்றவள் ஒரு தாயத்தை அவன் கையில் கட்டினாள். இது ஏது? யார் கொடுத்தது என்றான் சசி.


கிரகங்களின் சேர்க்கை தோசத்தினால் உங்களுக்கு ஆபத்து என்று ஒரு ஜோஸ்யர் சொன்னார். அதனால் உங்களுக்காக பத்தாயிரம் ரூபாய் கொடுத்து இதை வாங்கினேன் என்று அவள் பெருமையுடன் சொன்னாள்.

அடிப்பாவி! என்÷று வீறிட்ட சசி பத்தாயிரமா? முட்டாளே! உன்னை யாரோ அயோக்கியன் ஏமாற்றி விட்டானே என்று எட்டு வீடு கேட்க அலறினான்.

இடையில் குறுக்கிட்ட அவன் மகன், விடுங்கள் அப்பா! கண் திருஷ்டி பூஜை என்று பொய்யான வதந்தியைப் பரப்பி ஊர்முழுவதும் ஏமாற்றி நீங்கள் கொள்ளை இலாபம் அடித்தீர்கள். உங்களைப் போலவே மற்றொரு சாமர்த்தியசாலி ஜோஸ்யர் பொய்யான ஒரு வதந்தியைப் பரப்பி அம்மாவை ஏமாற்றிவிட்டார் என்று சமாதானம் செய்தான்.

கடவுளே! கண்திருஷ்டி பூஜை என்ற வதந்தியை ஏற்படுத்தியது நீங்கள்தானா! நீங்கள் ஊரை ஏமாற்ற நம்மை பதிலுக்கு எவனோ ஏமாற்றிவிட்டான் என்று சுமதி கூச்சலிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

19

"போகட்டும் வந்த விடயத்தைப் போசுவோம். பரநிருபரை சிம்மாசனத்தில் இருத்த வழி, போர்த்துக்கேயரின் உதவியைப் பெறு



சங்கிலியன் அரண்மனை மாளிகை

வதுதான். யாழ்ப்பாண மன்னன் படைப் பலம் மிக்கவன். அவனது கடற்படையில் நூற்றிற்கு மேற்பட்ட பாரிய மரக்கலங்கள் உள்ளன. தஞ்சாவூர் படையுடன் குருகுலத்தான் தென்னிந்தியாவில் காத்திருக்கிறான். இந்நிலையில் போர்த்துக்கேயரின் உதவி நமக்குத் தேவை. தென்னலங்கை சிங்கள மன்னன் பராக்கிரமபாகு தனது இராச்சியத்தை கோட்டை சீதாவாக்கை றைகமம் என மூன்றாகப் பிரித்து புவனேகபாகு, மாயாதுன்னை, றைகம்பண்டார ஆகிய புதல்வர்கள் மூவருக்கும் வழங்கிவிட்டான். கோட்டையின் மன்னனாகப் பதவியேற்ற புவனேகபாகுவிற்குப் போர்த்துக்கேயரின் உதவி தேவைப்பட்டது. புவனேக

## வன்னியர் வருகை

பாகுவின் மகள் வழி பிறந்த தர்மபாலனை அடுத்த மன்னனாக்க வேண்டும். அதற்குத் தடையாக வரக்கூடிய தர்மபாலனின் தகப்பன் விதியபண்டாரத்தை அடக்க வேண்டும். மற்றையது றைகமத்தை தனதாக்கிக் கொண்ட மாயாதுன்னை கோட்டைமீது படையெடுக்காமல் பாதுகாக்க வேண்டும். இந்த இரண்டிற்குமாகப் போர்த்துக்கேயருடன் நட்பாக இருக்கிறான். அவர்களும் புவனேகபாகு வழங்கிய கறுவாப்பட்டை ஏகபோக வர்த்தக உரிமைக்காக ஒப்புக் கொண்டனர். இன்று புவனேகபாகுவுக்குப் போர்த்துக்கேயர் ஆதரவுண்டு. போர்த்துக்கேயரின் ஆதரவின்றி நாம் சங்கிலியை சிம்மாசனத்திலிருந்து ¶ïuÀ x½BVm" என்றான் காக்கைவன்னியன்.

எவரும் சிறிது நேரம் பேசவில்லை. சிந்தனையில் ஆழ்ந்த பரநிருபசிங்கர். "அந்நியர் உதவியை நாடுவது சரியா?" என்று ஐயம் எழுப்பினார்.

"அதிலொரு பிழையுமில்லை. அது இராஜதந்திரம் மகாமந்திரியாரே. போர்த்துக்கேயர் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். தங்களது பர்தாங்கு நாணயத்தைத் தந்து எங்களது செப்புக்காசுகள் பெற்றுள்ளனர். அவர்களது பர்தாங்கு நாணயம் தங்கக்காசு. எங்களது செப்புக்காசு. 150 செப்புக் காசுகள் ஒரு பர்தாங்கு.

அதைக் கொடுத்துத்தான் கரையோரத்தில் மாடுகளை வாங்கினார்கள் ஆக்கும்"

"போர்த்துக்கேய கப்பித்தான் சௌசா என்னுடன் தொடர்பு கொண்டான். போர்த்துக்கேய கப்பலொன்று நெடுந்தீவின் கரையில் தரை தட்டியுள்ளது. மாலுமிகளையும் அக்கப்பலிலிருந்த பொருட்களையும் விடுவிக்க வேண்டுமாம். சௌசா தூது அனுப்பியுள்ளான். போர்த்துக்கேயருடன் நட்பை ஏற்படுத்த இது நல்ல சந்தர்ப்பம்" என்ற காக்கை வன்னியனைப் பரநிருபசிங்கர் நிமிர்ந்து ஏறிட்டார்.

"இது எப்படிச் சாத்தியமாகும்?"

"நீங்கள் மகாமந்திரி. சொன்னால் அரசன் கேட்பான். இது அரசியல் பிரச்சினை... கேட்க வேண்டும். மன்னர் கேட்பார்... இன்னொன்றையும் கேட்க வேண்டும். வெல்லை நதி (தொண்டைமானாறு) முகத்தில் நாம் ஒரு களஞ்சியம் அதாவது உப்புமால் கட்டியுள்ளோம். அங்கு வெல்லையிலும் கரணவாயிலும் விளைகின்ற தன்படுவான் உப்பை சேகரித்து இந்திய வியாபாரிகளுக்கு விற்று வருகின்றோம். அந்த வியா பாரத்தை போர்த்துக்கேயருக்கு வழங்க அனுமதி மன்னரி டம் கேட்க வேண்டும். நாம் போர்த்துக்கேயருடன்



தொடர்பு கொள்ள இது உதவும்" என்றார் அப்பாமுதலி.

"நல்ல திட்டம்தான். செயலாக வேண்டுமே..."

"மகாமந்திரி மனம் வைத்தால் எல்லாம் சரியாகும்"

உணவு அருந்தும் போது பரநிருபர் வினவினார்.

"வன்னியர் என்றால் சங்கிலிக்குப் பிடிப்பதில்லை. ஏன்?"

"பட்டத்து இளவரசர்களைக் கொன்றது வன்னியர் தான் என நம்புவதால்..."

"பட்டத்து இளவரசர்களைக் கொல்வதால் எங்களுக்கு என்ன இலாபம்" பதவியா வன்னியனின் வினா எழுந்தது. "யாருக்கு இலாபமோ அவர்க்ள்தான் செய்திருப்பார்கள். வீணாக வன்னியர் எனப் பழிபோட வேண்டாம், மகாமந்திரியாரே. நீங்கள் தப்பிவிட்டீர்கள், சங்கிலி அரசனானதால்..."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கொலையாளி..."

"அப்படியே எண்ணிக் கொள்ளுங்கள்"

"அடுத்து மன்னரைக் காண வேண்டும் சாட்டுக்காக...'

(தொடரும்)

# விக்கிலீக்ஸின் அதிரவைக்கும் அம்பலங்கள்!

...எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக் 2009 இல் விடுதலைப்புலிகளுக்கெதிரான இறுதிப் போர் நின்றுவிபாத வகையில் சர்வதேச நெருக்கடிகளிலிருந்து இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசாங்கம்தான் காப்பாற்றியது என்பதற்கான ஆதாரங்களையும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. 2009 இல் இலங்கை பயணம் மேற்கொண்ட அப்போதைய அமைச்சர் பிரணாப் முகர்ஜி பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பட்சத்தில் போரை தொடரலாம் எனக் கூறியதாக அமெரிக்க தூதரிடம் இந்திய துணைத்தூதர் சொன்னதையும் விக்கிலீக்ஸ் அப்போதே வெளியிட்டது. இதன்மூலமாக புலிகளை ஒடுக்குவதில் இந்தியா, இலங்கை, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுமே எவ்வாறு கூட்டாகச் செயற்பட்டு வந்திருக்கின்றன என்பதை நாம் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ் அரசியலில் மட்டுமல்ல, இந்திய தேசிய அரசியலிலும் விக்கிலீக்ஸ் தொடர்ந்து புயலைக் கிளப்பி வருகிறது. ஏற்கனவே 2011 இல் அது வெளியிட்ட ஒரு ஆவணத்தில் பா.ஜ.க. அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் எப்படி இரட்டை நிலைப் பாட்டுடன் வேஷம் போடுகிறது என்பதை வெளிப்படுத்தியது. 2009 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி மக்களவை தேர்தல் முடிவுகள் வருவதற்கு முந்தைய தினத்தில் அமெரிக்க தூதரக உயர் பொறுப்பிலிருந்த பீட்டார் பாலிக் அத்வானியை சந்தித்தார். அவரிடம் அத்வானி, "பா.ஜ.க ஆட்சி அமைத்தால், அமெரிக்கா- இந்தியா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது" எனக் கூறினாராம்.

2009 -ல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்போற்போது பிரணாப் முகர்ஜிக்கு நிதித்துறை வழங்கப்பட்டதை கேள்விப்பட்டு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அதிர்ச்சிக்கு ஆளானாராம். மோன் டெக் கிங் அலுவாலியா அல்லது ப.சிதம்பரத்திற்குத்தான் நிதித்துறை அளிக்கப்பட வேண்டுமென்று அமெரிக்க அரசாங்கம் விரும்பியது. இந்த முடிவு குறித்து தனது தூதரகத்திற்கு ஹிலாரி கிளின்டன் அனுப்பிய கேள்விகளை விக்கிலீக்ஸ் வெளியிட்டது. இந்திய அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளில் தனக்குச் சாதகமாக யார் இருக்க வேண்டும் என்பது வரை அமெரிக்கா தீர்மானமான தலையீடுகளைச் செய்து வந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

கடந்தவாரம் வெளிவந்த பல விக்கிலீக்ஸ் தகவல்கள் பலருக்கும் பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. 1970களில் ராஜீவ் காந்தி ஸ்வீடன் நாட்டு கம்பனியிடமிருந்து இந்திய இராணுவத்திற்கு ஜெட் விமானங்கள் வாங்க நடந்த பேரத்தில் இடைத் தரகராகச் செயற்பட்ட விவகாரம் புயலைக் கிளப்பி வருகிறது. அதேபோல இந்திரா காந்தியின் இன்னொரு மகனான சஞ்சய் காந்தி, அவர் பெரும்பான்மை பங்குகளை வைத்திருக்கும் மாருதி நிறுவனத்தின் சார்பாக பிரிட்டிஷ் எயார் காப்பரேசனுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஏஜெண்டாகச் செயற்பட்டதை வெளிப்படுத்தியிருக்கிறது. நெருக்கடிநிலை காலத்தின்போது இந்திரா காந்தியின் வீட்டிலேயே ஒரு அமெரிக்க உளவாளியை 1975-1977 வரை அமெரிக்கா வைத்திருந்தது என்ற அதிர்ச்சித் தகவலையும் விக்கி லீக்ஸ் வெளியிட்டுள்ளது.

மேலும் அப்போது நெருக்கடி நிலையை செயற்படுத்துவதில் யாரெல்லாம் முக்கிய பங்கு வகித்தார்கள் என்பதையும் எ.கே.ஆண்டனி போன்றவர்கள் சஞ்சை காந்தியை எதிர்த்ததையும் அமெரிக்க தன் உளவாளிகள் மூலம் தெரிந்து வைத்திருந்தது. நெருக்கடி நிலையின்போது இந்தியாவில் அமெரிக்காவின் செயற்பாடுகள் காங்கிரஸோடு நிற்கவில்லை. அப்போது முக்கிய எதிர்க்கட்சித் தலைவரும், அமெரிக்க எதிர்பார்ப்பாளரும், சோஷலிசக் கொள்கைகளைப் பேசுபவருமான ஜார்ஜ் பெர்னாண்டஸ் மத்திய அரசுக்கெதிராக சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட சி.ஐ.ஏ. யிடம் நிதி உதவி கோரினாராம். அதேபோல நெருக்கடி நிலையை அப்போதைய தி.மு.க. அரசும் எதிர்த்தபோது மத்திய அரசிற்கும் அதற்கும் கடும் மோதல் ஏற்பட்டது. அந்த சமயம் தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த கே. ராஜாராம் அமெரிக்க தூதரிடம், தமிழகம் இந்தியாவிலிருந்து தனியாக பிரிந்துபோக விரும்பினால் அதற்கு அமெரிக்கா உதவுமா என்று கேட்டதாக விக்கிலீக்ஸ் கூறுகிறது. இந்திரா காந்தியை சோவியத் ரஷ்யா ஆதரிப்பதால் அதற்கெதிராக ராஜாராம் இந்த உதவியைக் கேட்டாராம்.




இந்திய அரசியலைப் பற்றி, தமிழக அரசியலைப் பற்றி நம்மைவிட அமெரிக்காவுக்குத்தான் நன்கு தெரியும் என்பது மட்டும் நன்றாகப் புரிகிறது. இப்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டுவரும் தகவல்கள் எல்லாம் பொய் என்று காங்கிரஸ் புலம்ப ஆரம்பித்திருக்கிறது. விக்கிலீக்ஸை அது மத்திய கணக்கு தணிக்கைக் குழுவைச் சித்தரிப்பதுபோல சித்திரித்து வருகிறது. லண்டனிலுள்ள ஈகோடார் தூதரகத்தில் சரணடைந்து வாழும் விக்கிலீக்ஸின் தலைவர் ஜூலியன் அஸாங்கே காங்கிரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்து ராகுல் காந்திக்கு எதிராக அடுத்த தேர்தலில் நிற்கவா போகிறார்? (முற்றும்)

-மனுஷ்ய புத்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2013-14.05.2013



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**வருமானம் திருப்தி தரும்!**

**எந்த முடிவெடுத்தாலும் அதை எளிதில் மாற்றிக்கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் லாப ஸ்தானம் வலுவடைந்துள்ளது. இராசிநாதனாகவும் 4 க்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் நீச்சம் பெற்றிருப்பது யோகம்தான். 4,10 க்கு அதிபதியான வியாழன் 12 இல் மறைந்திருப்பதால் தொழிலில் எதிர்பாராத மாற்றங்களும் திருப்பங்களும் ஏற்படும்.

பொதுவாக தனாதிபதி விரயஸ்தானத்தில் இருந்து மாதம் தொடங்குவதால் மாதத்தொடக்கத்தில் விரயங்கள் அதிகரிக்கும் என்றே சொல்ல வேண்டும். முதல் வாரத்தில் ஏற்படும் விரயத்தை ஈடுகட்டும் விதத்தில் அடுத்தவாரம் முதல் வருமானம் இருமடங்காக வந்துகொண்டே இருக்கும். இந்த நேரத்தில் வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள வரை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிரடி திருப்பங்கள் ஏற்படும்.

### பொருளாதார நிலை உயரும்!

5 ஆம் இடத்தில் சனி வக்ரம் பெற்றிருக்கிறார். அதோடு ராகுவும் இணைந்திருக்கிறார். இராகு நிற்கும் வீட்டிற்கு அதிபதியான சுக்ரன் தன் வீட்டை தானே பார்க்கிறார். எனவே, பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். வரன்கள் வந்து வந்து கைநழுவிப் போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். சனி வக்ர நிவர்த்திக்குப் பிறகு பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். தந்தைவழி உறவில் இருந்த பிரச்சினைகள் தானாகவே மறையும். என்ன இருந்தாலும் சனி வக்ர காலம் முடியும்வரை ஆஞ்சநேயர் வழிபாட்டை முறையாக மேற்கொள்வத நல்லது.

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது பொருளாதாரநிலை உயரும். புதிய நண்பர்களின் அறிமுகமும் அதனால் தொழில் விருத்தியும் ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு விருத்திக்கும் வீட்டிலிருந்தபடியே நீங்கள் செய்யும் ஆன் லைன் தொழில் மூலம் அபரிமிதமான லாபங்களை காண்பீர்கள்.


மே 7 ஆம் திகதியில் இடப இராசியில் புதன் சஞ்சரிக்கும்பொழுது விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். குடும்பசுமை கொஞ்சம் அதிகரிக்கும். யாருக்கேனும் வாக்குறுதி கொடுத்தால் உரிய நேரத்தில் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான்! ஆரோக்கியத்திற்காக சிறிது செலவிடும் சூழ்நிலை உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். இந்த நேரத்தில் தூரதேச பயணங்களை ஏற்றுக் கொள்பவர்கள் சுயஜாதக ரீதியாக திசாபுத்தி பலம் பார்த்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 12 க்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் இலாகா மாற்றம், ஊர் மாற்றம், இடமாற்றம் போன்றவைகள் உருவாகும். சென்ற மாதத்தில் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும். பாதியில் நின்ற கட்டடப்பணியை மீதியும் தொடரும் வாய்ப்புண்டு. குடும்ப பெரியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டு கொண்டு வந்து அலங்கரித்து பார்க்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உண்டாகும்.

இம்மாதம் நின்ற கோலத்து விஷ்ணுவை வழிபட்டு நிம்மதியை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**அனுசரித்துச் சென்றால் ஆதாயம்!**

**நினைத்த காரியத்தை செய்து முடிக்க வேண்டுமென்று சொல்லும் கடக இராசி நேயர்களே!**

சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிக்கு நான்கில் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதோடு ராகுவும் இணைந்து சஞ்சரிக்கின்றார். அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கமும் மேலோங்கி இருக்கும் நேரமிது. எனவே, ஆரோக்கியத்திலும் பாதிப்பு, அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களில் தடைகள், மனநிம்மதி குறைவு ஆகியவை உருவாகும் நேரமிது.

புதிய முதலீடுகள் செய்யும் எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

### மலைபோல வந்த துயர் பனிபோல் விலகும்!

மே மாத கடைசியில் குருப் பெயர்ச்சியான பின்னர் குருவின் பார்வை சனி, ராகு ஆகியவற்றின் மீது பதியப்போகிறது. எனவே, அதன்பிறகு நிலைமை ஓரளவு சீராகும். மாதத்தொடக்கத்தில் இராசிநாதன் சந்திரன் உச்சம் பெறுகிறார். அதோடு குரு இணைந்து குருசந்திர யோகத்தை உருவாக்குகிறார். எனவே, மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும். சூரிய பலத்தோடும் சந்திர பலத்தோடும் மாதம் தொடங்குவதால் பயணங்கள் அதிகரிக்கும் என்றே சொல்ல வேண்டும். அதேநேரத்தில் 4 இல் சனி இருப்பதால் திடீரென பயணங்களில் மாற்றம் ஏற்படலாம். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்க முன்வருவீர்கள். இல்லையேல் பழுது நீக்குவதற்காகவே பாதிநேரத்தை செலவழிக்க வேண்டியிருக்கிறதே என்று சொல்வீர்கள்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிபகவானை வழிபடுவதோடு அதற்குரிய சிறப்புஸ்தலங்களுக்குச் சனி நிவர்த்தியாவதற்கு முன்னால் ஒருமுறை சென்று வழிபட்டு வருவது நல்லது. அஷ்டமாதிபதி சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்ற கூற்றின்படி சில நல்ல பலன்களையும் கொடுக்க நேரிடலாம். எனவே, யோக பலம் பெற்ற நாளில் சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று முறையான வழிபாடுகளை வைத்துக் கொண்டால் சந்தோஷங்களை நிலையாக தக்க வைத்துக்கொள்ள இயலும்.

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

ஏப்ரல் 21 ஆம் திகதி மேட ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3,12 க்கு அதிபதியான புதன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது தொழில் முன்னேற்றத்திற்கு உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். அது மட்டுமல்ல அன்னிய தேசத்தில் இருந்து எதிர்பார்த்தபடியே அனுகூல தகவல் வந்து சேரும். தனாதிபதியுடன் விரயாதிபதி இணைவதால் குடும்ப செலவுகள் கூடலாம். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவது மட்டுமல்லாமல் வாரிசுகளின் முன்னேற்றம் கருதி செலவிடும் சூழ்நிலையும் உருவாகும். இடம், பூமி விற்பனையால் லாபமுண்டு.

மே 7 ஆம் திகதி இடப புதனின் சஞ்சாரம் நடைபெறப் போகிறது. நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் பலவற்றையும் செய்து முடிக்கப் போகிறீர்கள். கடல் பயண வாய்ப்புகள் கைகூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்தப் படியே ஊதிய உயர்வு கிடைக்கலாம்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 6 க்கு அதிபதியோடு சுக்ரன் இணைவதால் எதிரிகளின் பலம் மேலோங்கும். யாருக்கும் பணப் பொறுப்பு சொல்வதை தவிர்ப்பது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும். குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வதன்மூலம் அமைதி காண இயலும்.

இம்மாதம் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு தித்திக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகச் சிறிய கார்

உலகின் மிகச்சிறிய கார் இங்கிலாந்தில் உள்ளது. இங்கிலாந்தில் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான டிவி நிகழ்ச்சியில் வரும் போஸ்ட்மேன் பேட்ஸ் கார் போன்று இந்த காரை பெர்ரி வாட்கின்ஸ் என்பவர் வடிவமைத்தார்.

இந்த கார் 104.14 செமீ., உயரமும், 66.04 செமீ அகலமும், 132.08 செமீ நீளமும் கொண்டது. இந்த காரை வடிவமைக்க 7 மாதங்கள் பிடித்ததாக பெர்ரி தெரிவித்துள்ளார்.

இந்த காரை வீதியில் இயக்குவதற்கு முறைப்படி போக்குவரத்து துறையிடம் பதிவு செய்துள்ளார் பெர்ரி. மேலும், சாலை வரியும் கட்டியிருக்கிறார்.

இந்த காரில் போக்குவரத்து விதிகளுக்குட்பட்ட வகையில் ஹெட்லைட், பிரேக் லைட், வாஷர்ஸ், வைப்பர்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் இருக்கின்றன.




# இணைந்தன



## கீபோர்ட் + மவுஸ்

கணனிச் செயற்பாடுகளுக்கு அவசியமான கீபோர்ட் மற்றும் மவுஸினை ஒருங்கே கொண்ட Combimouse தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய அடித்தளத்தினை Ari Zagnoev என்பவர் 1999ஆம் ஆண்டு இட்டதுடன் இலகுவாகவும் வேகமாகவும் பயன்படுத்தக் கூடியதாக அமைந்திருந்த அத்தொழில்நுட்பத்திற்கு விருதும் கிடைத்திருந்தது. தற்போது அவுஸ்திரேலியாவின் பேர்த் நிறுவனம் ஒன்று அதற்கு முழுமையான வடிவம் கொடுத்து அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அறிந்துகொள்ளுங்கள்



- முதன் முதலில் ஏறத்தாழ 52 ஆண்டுகளுக்கு முன் வந்த எனியாக் (ENIAC Electronic Numerical Integrator And Computer) என்னும் கணனி 80 அடி நீளத்தில் 30 அடி அகலத்தில் 17,000 ட்யூப்களுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. இன்றைய கணனி எனியாக் கணனியைக் காட்டிலும் 50,000 மடங்கு அதிவேகத்தில் செயற்பாடுகளை மேற்கொள்கிறது. முதல் கணனியைக் காட்டிலும் பத்து லட்சம் மடங்கு அதிக தகவல்களைக் கையாள்கிறது.
- இன்றைய மாடர்ன் கணனியின் முன்னோடி 1941இல் கொன்ராட் ஸ்யூஸ் (Konrad Zuse) என்பவரால் உருவாக்கப்பட்டது. அப்போது உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த படியால் அவர் அதனை ஜேர்மனி நாட்டின் ஆட்சியாளர்களிடம் காட்டி மேலும் மேம்படுத்த நிதி உதவி கேட்டார். யுத்தம் தான் விரைவில் முடிந்துவிடப் போகிறதே எதற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் ஜேர்மனியை ஆட்சி செய்தவர்கள் மறுத்துவிட்டனர்.
- இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் நாட்டின் புலனாய்வுப் பிரிவு கொலாசஸ் மெஷின்ஸ் என்னும் சாதனத்தை நாஸிக்களின் இரகசியக் குறியீட்டினைக் கண்டறியப் பயன்படுத்தியது. இந்த இயந்திரம் கணனியின் முன்னோடி என்று கருதப்படுகிறது.
- புரோகிராம் செய்து அதன் மூலமாக இயங்கக் கூடிய சாதனத்தை சார்லஸ் பாப்பேஜ் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே கண்டு பிடித்தார். ஆனால் தொடர்ந்து பணியாற்ற நிதி உதவி கிடைக்காமல் தன் திட்டத்தைக் கைவிட்டார். பின்னர் 1943இல் கணனிப் பயன்பாட்டிற்கு வந்தது. 1998இல் லண்டனில் உள்ள சயின்ஸ் மியூசியம் பாப்பேஜ் உருவாக்கிய திட்டத்தின் அடிப்படையில் அப்போது என்ன என்ன பொருட்களைக் கொண்டு உருவாக்கினாரோ அதேபோல ஒரு சாதனத்தை அமைத்து இயக்கி அருங் காட்சியகத்தில் வைத்தது. இன்னும் அது பாப்பேஜ் எதிர்பார்த்தபடி இயங்கிக் கொண்டுள்ளது.

## நிலத்திலும் நீரிலும்

நிலத்திலும், நீரிலும் செல்லும் தகவமைப்பு கொண்ட பஸ் நியூயோர்க், ஹஸ்டன் ஆற்றில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது. நியூயோர்க் நீர்வழி போக்கு வரத்து கழகத்துடன் இணைந்து இந்த பஸ்சை ஸ்டேஜ்கோச் நிறுவனம் இயக்கி வருகிறது. இந்த பஸ்சின் பின்புறம் நீரில் நீந்தி செல்வதற்கு ஏதுவாக புரொப்பல்லர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதேபோன்று, தரை யில் செல்வதற்கு ஏதுவாக டயர்களும் உள்ளன. இது சிறந்த போக்குவரத்து வாகனமாக இருப்பதாக ஸ்டேஜ்கோச் நிறுவனம் தெரிவித்துள்ளது.


இதனிடையே, இங்கிலாந்தில் இந்த பஸ் சோதனை அடிப்படையில் இயக்கப்பட்ட போது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து, அங்கு இந்த பஸ்சின் சோதனை ஓட்டம் நிறுத்தப்பட்டது குறிப் பிடத்தக்கது.

இந்த பஸ்சில் 50 பேர் அமர்ந்து பயணம் செய்ய லாம்.

சுற்றுலா துறையில் மட் டும் இந்த பஸ் இயக்கப்படும் என ஸ்டேஜ்கோச் நிறுவ னம் தெரிவித்துள்ளது. சாதாரண போக்குவரத்தில் இந்த பஸ் பயன்படுத்தப்பட மாட்டாது என அந்த நிறுவனம் கூறியிருக்கிறது.

இந்த பஸ் 7 லட்சம் பவுண்ட் விலையில் ஹாலந்து நிறுவனமான ஸ்டேஜ்கோச் உருவாக்கியுள்ளது.



## செவ்வாய்க்கு செல்ல...

விஞ்ஞானிகள் விண்வெளி ஓடங்களை அனுப்பி ஆய்வு செய்வதுடன் சில சமயங்களில் தாமும் நேரடியாக சென்று ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றனர். இவ்வாறே செவ்வாய்க்கு தற்போது விண்வெளி ஓடங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவை செல்வதற்கு மாதக்கணக்கில் பயணம் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

எனவே இப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக தற்போது பூமியிலிருந்து வெறும் 30 நாட்கள் ப்யணத்தின் பின்னர் செவ்வாயை சென்றடையக் கூடிய அதிநவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்டுபிடிப்பானது செவ்வாயில் ஆராய்ச்சியை துரிதப்படுத்துவதற்கும் விரிவுபட்ட ஆய்வினை மேற்கொள்ளவும் உதவும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதையுண்டுபோகும் கனவுகள்



# இனத்தின் தனித்துவப் பண்புகளை அழிக்கும் தொடர் நடவடிக்கைகள்

பொருளியலின் அடிப்படையில் உற்பத்தியில் பயன்படுத்தக் கூடிய சகல இயற்கை வளங்களையும் நிலம் என்று கூறலாம். நிலத்தினை மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. வரலாறுகள் எங்கிருந்து ஆரம்பிக்கிறதோ அது, அதே இடத்தில் நின்று விடுவதில்லை. கால ஓட்டத்திற்கு ஏற்ப புதிய வரலாறுகள் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். இது உலக நியதி. இதனை யாராலும் மாற்ற முடியாது.

ஒவ்வொரு நிலப் பிரிவுக்ளும் ஒவ்வொரு இனக்குழுக்களுக்கு உரியது. இது சங்க காலம் முதலே பின்பற்றப்படுகின்ற ஒரு வழமை. நிலத்திற்காகவே எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் உருவெடுத்து, அவை வெற்றிபெற்றும் உள்ளன.

ஒரு இனம், தான் பூர்வீகமாக வாழ்ந்த பகுதி, தனக்கான சொந்தம் என்று கருதுகிறது. அதனை எவரும் மறுக்க முடியாது. அதற்கான காரணங்கள் நிறையவே பொதிந்திருக்கின்றன. ஆனால், இலங்கையில் இந்த உரிமை மறுக்கப்பட்டிருக் கிறது. சிறுபான்மை இனம் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்திற்கு என்று இருக்கும் தனித்துவமான பண்புகளை அழிக்கும் நடவடிக்கையே முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனைத் தான் ஆட்சியிலுள்ள அரசு செய்து வருகிறது.

வடக்கு-கிழக்கிலுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுடைய நிலங்களை உயர் பாதுகாப்பு வலயங்க்ள் என்ற போர்வையில் தன்வசம் விழுங்கி வைத்துள்ளது அரசு. இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள நிலங்கள் தமிழ் மக்களுடைய பூர்வீக சொத்துக்கள். அவர்களின் மூதாதையர்கள் வாழ்ந்து மடிந்த இடங்கள். இந்த ஆத்மார்த்த உணர்வின் வெளிப்பாடாக, சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போல வருமா என்ற பாடலடி, எல்லோருக்கும் பிடித்த வரிகளாக என்றென்றும் வலம்வருகின்றது.

உலக வரலாற்றில் பல பாகங்களில் குறிக்கப்பட்ட நிலத்தின் பூர்வீக குடிகள், வலிமை வாய்ந்த இன்னுமொரு இனத்தின் ஆக்கிரமிப்பால் அழிக்கப்படுவதும் விரட்டியடிக்கப்படுவதும், அடிமைப்படுத்தப்படுவதும் காலங்காலமாக நடந்தேறி வருகின்றன.

இதனைத்தான் இலங்கை அரசும் செய்து வருகின்றது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய நிலங்கள் எந்த விதமான காரணங்களும் இல்லாமல் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டுவருகின்றன. இவை அபிவிருத்தி நடவடிக்கைகள் என்ற போர்வையிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் மற்றும் சிங்கள குடியேற்றங்கள் என்ற போர்வையிலும் அபகரிக்கப்படுகின்றன.

**திட்டமிட்ட இன அழிப்பு**

தமிழினம் என்ற ஒன்று இலங் கைத் தீவில் இருக்கக் கூடாது என்ற முனைப்புடனேயே இலங்கை அரசு திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை தமிழர் தாயகப் பகுதியில் அரங்கேற்றி வருகிறது.

ஒரு நாட்டில் வாழும் மக்களோ அல்லது தனிநபரோ அந்நாட்டுக்குள் எந்த இடத்திலும் குடியமர்வதற்கு உரிமை உடையவர். ஆனால், இன்னொருவருடைய நிலத்தை பறித்து அதில் வாழ்வதற்கு மற்றவருக்கு உரிமை இல்லை.

குறிப்பாக, தமிழர் தாயகப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான சிங்களக் குடியேற்றங்கள் இன்று முல்லைத்தீவு வரை படர்ந்து சென்றுள்ளன.

அநுராதபுர மாவட்டத்தின் சில பகுதிகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளையும் இணைத்து வெலிஓயா பிரதேச செயலகமொன்றை இலங்கை அரசு திட்டமிட்டு நிறுவியுள்ளது. தனித் தமிழ் மாவட்டங்களை சிங்கள கலப்பு மாவட்டங்களாக மாற்றும் அரசின் வியூகங்களுள் இதுவும் ஒன்றுதான்.

யாழ் மாவட்டத்தில் வலி வடக்கு பகுதியைச் சேர்ந்த 24 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தை மக்களிடம் கையளிக்கா மல், சிங்கள இராணுவ முகாம்களுக்காக முற்றுமுழுதாகப் பிரித்தெடுப்பதற்கு, அரசு முடிவெடுத்துள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகம், பலாலி விமானத்தளம் என்பவற்றையும், படைத்தளக் கட்டுமானங்களையும் விரிவாக்கம் செய்யும் நோக்கிலேயே இந்தப் பிரதேசம் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இந்தக் காணிகளை சுவீகரிப்பதற்காக யாழ். செயலகத்தில் அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது மீதமிருக்கும் காணியை கொள்ளையிடவா அல்லது தமிழ் மக்களின் காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வேலையா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக குறித்த 24 கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக நலன்புரி நிலையங்களிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

போர்முடிவுற்ற பின்னர் தமது சொந்த நிலத்தில் மீளக் குடியேற்றுமாறு இந்தப் பகுதி மக்கள் அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டனர். நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தனர்.

மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. ஆனால், அவற்றையெல்லாம் மீறி தொடர்ந்தும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டிலேயே அந்தப் பகுதிகள், பாதுகாப்பு வேலியிடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தையும் முழுமையாக சிங்கள மயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஏன் இவ்வாறு தமிழர் தாயக பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் திட்டமிட்ட ரீதியில் நடைபெறுகிறது என்பது ஆழமாகச் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

தமழீழ விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடபகுதியில் அதிகளவான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். எனவே, இதனை குறைக்க வேண்டும் என சர்வதேச நாடுகளும் மனிதாபிமான அமைப்புகளும் கோரி வருகின்ற நிலையில், இராணுவத்தினரை குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருக்கின்றது. ஆனால், இராணுவத்தினரை குறைத்தால், மீண்டும் விடுதலைப்புலிகள் உருவாகிவிடுவார்கள் என்று அரசு பயங்கொள்கிறது.

இதற்காக தமிழர் தாயக பகுதியில் சிங்கள குடும்பங்களை குடியேற்றி, அங்கு சிங்கள மக்கள்தான் வாழ்கின்றனர்; இராணுவத்தினர் இல்லை என்று காட்டிக்கொள்ள இலங்கை அரசு முயற்சிக்கின்றது.

சிங்கள முஸ்லிம் மக்களைத் தமிழர் பகுதியில் திட்டமிட்ட ரீதியில் குடியேற்றுவதால் இன விகிதாசாரத்திலும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் வடக்கில் தேர்தல் ஒன்று இடம்பெறுமாக இருந்தால் தமிழர்களது பெரும்பான்மை பலத்தை இல்லாது செய்ய முடியும் என அரசு கருதுகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வடக்கில் தேர்தலை நடத்தப்போவதாக அரசு அறிவித்துள்ளது. அதற்கு முன்னர் இனப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறது. அதற்கான அடித்தளங்களை தற்போது அரசாங்கம் ஆரம்பிக்க தொடங்கியுள்ளது.

ஒரு பிரதேசத்தின் இனப்பரம்பல் அப்பிரதேசத்தின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்திகொண்டது. எனவே அதனை மாற்றினால், எல்லா விடயங்களையும் மாற்றிவிடலாம். இதனை கருத்திற்கொண்டுதான் இலங்கை அரசு செயற்படுகிறது.

இதன் அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் விகிதத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் அரசு செயற்படுகின்றது. ஊடகர்களின் மீதானதும் ஊடகங்களின் மீதானதுமான தாக்குதல்கள் இதனையே கட்டியம் கூறுகின்றன.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் முடிவடையும் நிலையில் வடக்கில் காப்பெற் வீதிகளை தவிர எந்த விதமான அபிவிருத்தி பணிகளையும் காண முடியவில்லை.

அத்துடன் வடபகுதியில் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. இந்நிலையில் எப்படி நீதியான ஒரு தேர்தலை எதிர்பார்க்க முடியும் என்பதே தமிழ் மக்களின் இன்றைய கேள்வியாகும்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ.ந.கொள்கைக்கு முரணாக இலங்கை செயற்படுகின்றது

## உறுப்புரிமையை இரத்தாக்க கோருகின்றனர் சட்டத்தரணிகள்

(கொழும்பு)

இலங்கையின் பொதுநலவாய நாடுகள் உறுப்புரிமையை இடைநிறுத்துமாறு பொதுநலவாய நாடுகள் சட்டத்தரணிகள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

தென் ஆபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்ற மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொது நலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகளுக்கு முரணான வகையில் இலங்கை செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் அமர்வுகளை நடத்துவது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகள் அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொது நலவாய நாடுகள் அமர்வினை நடத்துவது அந்த அமைப்பின் நன்மதிப்பிற்கு களங்கத்தை ஏற்டுத்தக் கூடுமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொள்கை மீறல்களில் ஈடுபடும் உறுப்பு நாடுகளின் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தாமை அமைப்பை பலவீனப்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# பாணின் விலை அதிகரிக்கலாம்


பாணின் விலை உயர்த்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மின்சாரக் கட்டணங்கள் 26 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டதனைத் தொடர்ந்து பாணின் விலை உயர்த்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதனால் உற்பத்திச் செலவு பெருமளவில் அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதனால் பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டியேற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக உற்பத்தி செலவு அதிகரித்துச் செல்வதாகவும் முடிந்தளவு விலையேற்றத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கப்பட்டு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வேலையில்லா பிரச்சினை குறைந்து வருகின்றது-பசில்



(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் கிராம மக்கள் மத்தியில் நிலவிய வேலையில்லாப் பிரச்சினை இப்போது வெகுவாகக் குறைந்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்புக்கான கனடாவின் சிறப்புத் தூதுவர் செனட்டர் ஹக் செகாலுடனான சந்திப்பின் போதே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது பொருளாதாரத்துறையில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து அமைச்சர் சிறப்புத் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் விவசாய நடவடிக்கைகளுக்கு நிகராக மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

# தமிழ் பிரஜைகளுக்கு பிரிட்டனில் சிறை

பிரிட்டனில் சிங்களவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய இரண்டு பிரிட்டன் தமிழர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர் என்ற காரணத்தினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடத்திய இரண்டு தமிழர்களுக்கு ஏழு மற்றும் எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வெம்பிளி நகரில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் கைதான எஞ்சலோ லாசரஸ் மற்றும் சேதுலிங்கம் சின்னவேகம் ஆகியோரின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்.

மிக மோசமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

தாக்குதல் நடத்தியமை ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டதனைத் தொடர்ந்து குறித்த இருவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (அ-2)




★ *1587*-ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.

★ *1775*-அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.

★ *1810*-வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.

★ *1861*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரில் கூட்டமைப்பின் ஆதரவாளர்களினால் ஐக்கிய அமெரிக்கப் படைகள் தாக்கப்பட்டன. நான்கு படையினரும் 12 பொதுமக்களும் உயிரிழந்தனர்.

★ *1892*-ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ள்ஸ் டூரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.

★ *1902*-குவாத்தமாலாவில் 7.5 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 2 ஆயிரம் பேர் இறந்தனர்.

★ *1904*-கனடாவின் ரொரண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தது.

★ *1928*-ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் 125 ஆவதும் கடைசியுமான தொகுதி வெளிவந்தது.

★ *1936*-பாலஸ்தீனர்களால் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ *1954*-உருது மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.

★ *1971*-முதலாவது விண்வெளி ஆய்வுகூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட் 1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★ *1975*-இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ *1989*-அமெரிக்காவின் அயோவா என்ற கப்பலில் பீரங்கி மேடை ஒன்று வெடித்ததில் 47 கடற்படையினர் உயிரிழந்தனர்.

★ *1993*-ஐக்கிய அமெரிக்கா டெக்சாசில் டாவீடியன் என்ற மதக்குழு ஒன்றின் கட்டடத்தை 51 நாட்களாக சுற்றி வளைத்த அமெரிக்க FBI இன் முற்றுகை கட்டடம் தீப்பற்றியதில் முடிபுக்கு வந்தது. 81 பேர் உயிரிழந்தனர்.

★ *1995*-அமெரிக்காவின் ஒக்லகாமா நகரத்தில் நடுவண் அரசுக் கட்டடம் ஒன்று தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதில் 168 பேர் உயிரிழந்தனர்.

★ *1999*-ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.

★ *2006*-நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புக்கள்

★ *1832*- ஜொசே ஐசாகிர், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ.1916)

★ *1912*-கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ.1999)

★ *1957*-முகேஷ் அம்பானி, இந்தியாவின் தொழிலதிபர்


### இறப்புக்கள்

★ *1882*-சார்ள்ஸ் டார்வின் பரிணாமக் கோட்பாட்டைக் கண்டு பிடித்தவர் (பி. 1809)

★ *1906*-பியரி கியூரி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1859)

★ *1998*-ஒக்டாவியோ பாஸ், நோபல் பரிசு பெற்ற மெக்சிக்கோ எழுத்தாளர் (பி.1914)

### சார்ள்ஸ் டார்வின்



சார்ள்ஸ் டார்வின் ஓர் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் ஆவார். இவர் 1809 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள சுரூஸ்பெரி எனுமிடத்தில் பிறந்தார். அவரது தந்தையார் ராபர்ட் டார்வின் ஒரு மருத்துவர்.

சிறு வயது முதற் கொண்டே விலங்குகள், புழு, பூச்சிகள் ஆகியன மீது அவர் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். தனது 22 ஆவது வயதில் இறையியல் (Theology) பட்டம் பெற்றார்.

இவரே, மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தவன். உலகில் விலங்குகள் மற்றும் உயிரினங்களின் வளர்ச்சி என்பது தக்கன பிழை க்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது. அதாவது வலிமையானது உயிர் வாழும் என்றதன் அடிப்படையில் அமைந்தது போன்ற அறிவியல் கோட்பாடுகளைக் கண்டறிந் தவராவார். இவர் தாம் கண்டுபிடித்த உண்மைகளையும் கொள்கைகளையும் 1859 ஆம் ஆண்டில் உயிரினங்களின் தோற்றம் என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இது மிகவும் புகழ்பெற்ற புரட்சி ஏற்படுத்திய நூலாகும். டார்வினின் கண்டுபிடிப்புக்களைப் பற்றிய ஏனைய நூல்கள் மனிதனின் மரபு வழி மற்றும் தாவரங்களின் இடம்பெயர்த் திறன் ஆகியனவாகும். மேலும் மண்ணின் வளத்திற்கும் பயிர் வளர்ப்புக்கும் முக்கிய காரணமாக விளங்குவது மண்ணில் வாழும் மண்புழுக்கள் என்பதையும் அவருடைய நூலான தாவர வளர்ச்சிக்குப் புழுக்களின் பங்கு விளங்குகின்றது.

டார்வின் பரிணாம கோட்பாடு மூன்று அம்சங்களைக் கொண்டது.

1. மாறுபாடு (எல்லா உயிரினங்களிலும் காணப்படுவது)

2. மரபு வழி (ஒத்த உயிர் வடிவத்தை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல்)

3.உயிர் வாழ்தலுக்கான போராட்டம் (எந்தெந்த மாறுதல்கள் ஒரு குறிப்பிட்ட சூழலுக்குச் சாதகமாக இருக்கும் என்று கணித்து அதற்கேற்ப இனப்பெருக்க முறைகளை தீர்மானித்து உயிரினங்களில் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்வது) என்பவையாகும். சார்ள்ஸ் டார்வின் 1882 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். இங்கிலாந்தின் வெஸ்ட் மினிஸ்டர் அப்பேயில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கு பிரதேசங்களுக்கு அடிப்படை வசதிகள் பூர்த்தியாகவில்லை

## முல்லையில் சிங்கள மக்களுக்கு மட்டும் தனியான பிரதேச செயலகம் அமைக்கின்றனர்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாந்தை கிழக்கு உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு அடிப்படை வசதிகளைக்கூட பெற்றுக் கொடுக்காத வடமாகாணசபை யுத்தத்தினால் எவ்வகையிலும் பாதிக்கப்படாத சிங்கள மக்களுக்கென தனியான பிரதேச செயலர் பிரிவினை உருவாக்கி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படும் உதவிகளையும் சுரண்டி வருவதாக மாந்தை கிழக்கு பிரதேசசபையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் சமகால நிலைமைகள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் பிரதேச மக்கள் படும் இன்னல்கள் குறித்து நேற்று முன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்த, சபையின் தவிசாளர் அ.தனிநாயகம், உப தவிசாளர் சி.செந்தூரன் ஆகியோர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், பிரதேசத்தில் 2ஆயிரத்து 500 வரையான குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் 40 வருடங்களுக்கும் முன்னர் அமைக்கப்பட்ட வீதிகளே தற்போதும் பாவனையில் இருந்து வருகிறது. குறிப்பாக மாந்தை கிழக்குப் பிரதேசத்தை ஏ-9 வீதியுடன் இணைப்பதற்கான அல்லது மல்லாவியுடன் இணைப்பதற்கான வீதி இது வரை புனரமைக்கப்படவில்லை.

இதனால் வைத்தியசாலை தனது அம்புலன்ஸ் வண்டி சேவையினை நிறுத்திக் கொள்ளப்போவதாகவும் பேருந்து சங்கம் பிரதேசத்திற்கான போக்குவரத்து சேவையினை நிறுத்திக் கொள்ளப்போவதாகவும் அறிவித்திருக்கின்றார்கள். எமது பிரதேசத்திற்குவரும் பிரதான வீதிகளின் மிகமோசமான நிலையே இதற்குக் காரணம்.

பிரதேசத்திலுள்ள உள்ளக வீதிகளின் நிலையும் பரிதாபகரமானதாகவே உள்ளது. பிரதேச சபை சில தனியார் நிறுவனங்களினதும் தொண்டு நிறுவணங்களினதும் உதவிகளைப் பெற்று வீதிகள், பிரதேச மக்களுக்கான மலசல கூட வசதி போன்றவற்றை பெற்றுக் கொடுத்திருக்கின்றது. இவற்றைவிட மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்களில் அரசாங்கத்தினால் எந்த உதவிகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

மேலும் மின்சாரம் வழங்கலுக்கான முன்னெடுப்புக்கள் உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் மிக வேகத்தில் இடம்பெற்று வந்தது. ஆனால் தேர்தல் நிறைவுடன் அந்த முன்னெடுப்புக்களும் நிறுத்தப்பட்ட நிலையில் போடப்பட்ட மின்சாரக் கம்பங்களும் தந்திகளும் மின்மாற்றிகளும் இதுவரை அப்படியே இருக்கின்றன. குறிப்பாக பிரதேசத்திலுள்ள ஒரேயொரு வைத்தியசாலைக்கும்கூட இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

கல்விக்கும் அதேநிலையே .பிரதேசத்தில் கல்வி கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்கள். ஆனால் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் எவையும் இதுவரை நிறைவேற்றிக் கொடுக்கப்படவில்லை. சுமார் 40 வருடத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான தங்குமிடத்திலேயே இன்றும் ஆசிரியர்கள் தங்கியிருக்கின்றார்கள்.

100 அடி நீளமான பாடசாலைக் கட்டடத்திலேயே அதிபர் அறை உள்ளிட்ட வகுப்பறைகளும் அமைக்கப்பட்டு 194 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். எனவே இங்கு கல்வியின் நிலை என்ன என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இதேபோல் பிரதேசசபை உள்ளிட்ட திணைக்களங்கள் அனைத்திலும் 50 வீதத்திற்கும் மேற்பட்ட ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் எந்த வேலைத்திட்டத்தையும் மேற்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் பிரதேச சபையினாலும் சுயமாக வருமானம் ஈட்டும் வழிகளை தேட முடியவில்லை. திட்டங்களை வகுத்தால் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவினதும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவினதும் அனுமதியினைப் பெறவேண்டிய நிலை நிர்ப்பந்தம் இலங்கையில் ஏனைய பகுதிகள் எங்கும் இல்லாமல் இங்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் திட்டமும் திட்டத்திற்கான நிதியும் பொறுப்புவாய்ந்த அமைச்சர்களால் வேறு இடங்களுக்கும் போகிறது.

எனவே யுத்தம் நிறைவடைந்து 4 வருடங்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடைக்கப்பெறாத நிலையில் பிரதேசத்திலிருந்து 50 வீதமான மக்கள் வெளியேறியிருக்கும் நிலையில் மிகமோசமான நிலையை எமது பிரதேசம் எதிர்கொண்டிருப்பதாகவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் அக்கறையற்றிருப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)







கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி மற்றும் ஆசிரிய பங்கீடு தொடர்பான கலந்துரையாடல் நேற்று வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையில் இடம் பெற்றது.இக்கலந்துரையாடலின் போது வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்வி பணிப்பாளர் ப.செல்வராசா பிரதிக்கல்வி அமைச்சின் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் உட்பட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சிகல்வி வலய உயர் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

## மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

தனது மகளையே பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு தலைமறைவாகியிருந்த 55 வயதுடைய நபர் நேற்று முன்தினம் பூநகரிப் பகுதியில் வைத்து பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ். கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வீட்டில் தனிமையாக இருந்த தனது பதின்ம வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கடந்த 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தார்.

இந்நிலையில் பிணையில் விடுவிக்கப் பட்ட நபர் கடந்த 5 வருடங் களாக தலைமறைவாகியிருந்த நிலையில் பூநகரிப் பகுதியில் வைத்து நேற்று பிடிக்கப்பட்டார்.

குறித்த நபருக்கு பிணை வைத்த நபரே இவரைபிடித்துக்கொண்டுவந்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## மீனவர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு

இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் மீனவர் பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

பேச்சவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதெனவும் பேச்சுவார்த்தை மூலமாக மாத்திரமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் நோக்கங்களுக்காக தமிழக அரசு மத்திய அரசு மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உள்ள முரண்பாடு முடிவுக்கு கொண்டுவரப்படும் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஷிராணி பண்டாரநாயக்க நாட்டைவிட்டு வெளியேறத்தடை

முன்னாள்பிரதமநீதியரசர் கலாநிதிஷிராணி பண்டாரநாயக்க வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் அவரின் கடவுச் சீட்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்க நாட்டிலிருந்து தப்பியோட முடியாத வகையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவே இத்தடையை விதித்துள்ளது.

இது தொடர்பான உத்தரவு அடங்கிய அறிக்கை ஆணைக்குழுவினால் கடந்த 11 ஆம் திகதி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இலஞ்ச ஆணைக்குழுத் தலைவர், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர், டீ.ஜே. த. உறுப்பினர்களான எஸ். பாலபட்ட பெந்தி மற்றும் ஏனைய உறுப்பினர்களான முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எல்.கே.விமலசந்திர முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன ஆகியோரது ஏனைய கையொப்பங்களுடன் இந்தத்தடை உத்தரவு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்டது.

அரச சேவையில் இருக்கும் போது ஷிராணி பண்டாரநாயக்கவிடம் இலஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரணைகளை நடத்தி வந்தது. அவ் விசாரணைகள் தற்போதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றைப் பெற ஷிராணி பண்டாரநாயக்க ஆணைக் குழுவினால் இருமுறை அழைக்கப்பட்டிருந்தார். அந்த சந்தர்ப்பங்களில் அவர் அறிக்கை ஒன்றையும் கொடுக்கவில்லை. பல்வேறு எதிர்ப்புக்களைத் தெரிவித்து அறிக்கை சமர்ப்பிப்பதில் இருந்து விலகி அறிக்கை சமர்ப்பிக்க வேறு திகதியையும் கொடுத்திருந்தார்.

ஷிராணி பண்டாரநாயக்க இந்த இலஞ்ச விசாரணைக்கு ஆஜராகாமல் வெளி நாடொன்றுக்கு தப்பியோட முயற்சி செய்வதாக தகவல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருந்ததாகவும் அதன் பிரகாரம் இலஞ்ச ஆணைக்குழு அவர் நாட்டிலிருந்து தப்பிச் செல்ல இயலா வண்ணம் அவரின் கடவுச்சீட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்டனில் வெடித்தகுண்டுகள் புலிகள் பயன்படுத்திய குண்டுகளுக்கு ஒப்பானவை

## மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா சுட்டிக்காட்டு

**அமெரிக்காவின் பொஸ்டனில் வெடித்த குண்டுகள் விடுதலைப்புலிகளால் 1980 களின் தொடக்கத்தில் இலங்கை இராணுவத்தினர் மீதான தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டுகளுக்கு ஒப்பானது என்று இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கை தூதுவராக உள்ள அவர் பொஸ்டனில் வெடித்த குண்டு தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொஸ்டன் குண்டுத் தாக்குதலுக்கு நேரக் கணிப்புடன் கூடிய கரிமருந்து துகள், ஆணிகள் சிறிய இரும்புக் குண்டுகளை உள்ளடக்கிய இரண்டு மேம்படுத்தப்பட்ட வெடிமருந்துக் கருவிகள் பயன்படுத்தப் பட்டதாக விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளதாக ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.

ஈழப் போரின் போது 1980 களின் தொடக்கத்தில் விடுதலைப் புலிகள், நட்டுக்கள், போல்ஸ்களை உள்ளடக்கிய இத்தகைய வெடிகுண்டுகளை பயன்படுத்தியிருந்தனர்.

பொஸ்டன் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஊடக அறிக்கைகள் விடுதலைப் புலிகளாலும் இலங்கை இராணுவத்துடன் போரிட்ட ஏனைய பல தீவிரவாத குழுக்களாலும் ஆரம்ப காலத்தில் தயாரிக்கப்பட்ட குண்டுகளைத் தான் நினைவுபடுத்துகின்றன.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் துல்லியமான தொழில் நுட்பத்தை கொண்டிருந்தனர். மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் கருவிகளால் முப்ப தாண்டுகளில் நாம் பயங்கரமான அனுபவங்களை பெற்றிருக்கிறோம்.

இலங்கைப் படையினருக்கும் பொது மக்களுக்கும் அதிகளவு சேதங்களை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் பெருமளவில் போல்ஸ் மற்றும் நட்டுக்களை தமது குண்டுகளில் பயன்படுத்தினர்.

விடுத லைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்த பரிசோதனைகள் இப்போதைய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு உதவ முடியும்.

பொஸ்டன் மரதன் போட்டியின் முடிவிடத்தில் வைக்கப்பட்டிருந்த ஆணிகள் போல்ஸ் பெயாரிங்குகள் நிரப்பிய பிரசர் குக்கரே வெடிக்க வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளால் பிரசர் குக்கர்கள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் குண்டு தயாரிக்கப் பயன்படுத்துப்பட்ட உள்ளீடுகள் விடுதலை புலிகளாலும் பயன்படுத்தப்பட்டவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார் (அ-2)

# சவுதி நாட்டின் வீதியோரங்களில் வாடும் 300 ஈழத் தமிழர்கள்



சவுதி அரேபியாவின் வீதியோரத்தில் இலங்கை தமிழர்கள் சுமார் 300 பேர் வரை தற்போது உறை விடம், உணவு, தண்ணீர், கழிப்பிடம் போன்ற எந்த வசதியும் இல்லாமல் கொளுத்தும் வெயிலில் வாடுகின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்பு பகுதியில் இருந்து சுமார் ஆயிரம் தமிழர்கள் சவுதி அரேபியா ஜெத்தா நகருக்கு கட்டு மான வேலை நிமிர்த்தமாக சென்றுள்ளனர்.

இவர்கள் குறைந்த ஊதியத் திற்கு அங்கு பணியில் அமர்த்தப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கு சவுதி அரேபிய அரசின் அடையாள அட்டையும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அண்மையில் சவுதி அரசு அடையாள அட்டை இல்லாத வெளிநாட்டவர்களை எந்த நிறுவனமும் பணியில் அமர்த்தக் கூடாது என கடுமையான சட்டம் கொண்டு வந்தது. அந்த சட்டத்தை தொடர்ந்து பல வெளிநாட்டவர்கள் பல நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப் பட்டனர். இந்தியர் ஆயிரக்கணக்கில் வெளியேறினர்.

அவர்களை பாதுகாக்க இந்திய தூதரகம் முயற்சிகள் எடுத்து பல இந்தியர்களை பத்திரமாக மீட்டுள்ளது. ஆனால், இலங்கையின் குடிமக்களாகிய தமிழர்கள் மூன்று மாதத்திற்கு முன்பு நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்பட்டபோது அவர்களை பத்திரமாக மீட்டெடுக்க இலங்கை அரசு துரித நடவடிக்கை எடுக்கவில்லை. தம்மை உடன்காப்பாற்ற இல ங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட தமிழ ர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதில் சில சிங்கள மக்களும் பாதிக் கப்பட்டுள்ளனர் என தெரிய வருகின்றது. (அ-2)

# இடைக்கால நிர்வாக சபையை சர்வதேசத்தின் கண்காணிப்புடன் ஏற்படுத்த வேண்டும்

## சிறிதரன் எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

**வட, கிழக்கு தமிழர் தாயக பிரதேசங்களில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை சர்வதேசத்தின் கண்காணிப்பில் ஏற்படுத்துவதன் மூலமே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்பிற்கு முற்றுப்புள்ளியிட முடியும் என்பதை ஏற்றுக் கொள்வதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை ஏற்படுத்துவது தொடர்பில் பல விமர்சனங்களும் கருத்துக்களும் எழுந்திருக்கும் நிலையில் விடயம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

இடைக்காலநிர்வாகசபை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பலரிடம் பல மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தமிழர்களை பாதுகாக்கும் வகையிலானதும் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்பிற்கு முற்றுப்புள்ளியிட கூடியதுமான சர்வதேச கண்காணிப்பிலான இடைக்கால நிர்வாக சபையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாட்டை தமிழர்கள் அதிகமாகவே உணர்ந்திருக்கின்றார்கள். அதனை வரலாற்றில் பல தடவைகள் பிரயோகித்து பார்த்திருக்கின்றோம். எனவே, இடைக்கால நிர்வாக சபையை நான் வரவேற்கின்றேன்.

மேலும் இடைக்கால நிர்வாக சபை ஒன்று உருவாக்கப்பட்டாலே நடைபெற்ற இன அழிப்பின் அடையாளங்களை சுதந்திரமான முறையில் சர்வதேசம் பெற்றுக் கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடியும். இன அழிப்பு தொடர்பாகவும் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாகவும் ஊடகங்களிலும் ஐ.நாவிடமும் உள்ள தகவல்கள் மிக சொற்பமானவை. இன்னமும் அதிகமாகவும் சாட்சிகளுடனும் தமிழர்களிடம் பல விடயங்கள் இருக்கின்றன.

அவற்றை மக்கள் சுதந்திரமாக வெளிப்படுத்த முதலில் தமிழர்களுக்கு பாதுகாப்பு அவசியமாகின்றது. எனவே, அந்தப் பாதுகாப்பினை சர்வதேசத்தின் கண்காணிப்பில் அமையும் இடைக்கால நிர்வாக சபை மூலம் ஏற்படுத்த முடியும் என நம்புகின்றேன்.

மேலும் அண்மையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடமும் யாழ். சிவில் சமூகம், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் சர்வதேச கண்காணிப்பிலான இடைக்கால நிர்வாகசபை ஒன்றை கோரியுள்ளனர். அது வரவேற்கத்தக்கது என்றார். (அ-2)

# வன்னி மாவட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு சகல வரப்பிரசாதங்களும் விரைவில்

## சமுர்த்தி அ.சபையின் பணிப்பாளர் பந்துல திலகசிறி

பல்வேறு பட்ட இன்னல்கள், துயரங்களை அனுபவித்த உங்களை நாம் என்றுமே மறந்து விடவில்லை. மாறாக துரித அபிவிருத்திப் பாதையின் ஊடாக சகல வித வரப்பிரசாதங்களையும் நீங்கள் அனுபவிக்கும் நாள் சமீபமாகும் என இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும் சட்டத்தரணியுமான பந்துல திலக சிறி தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பல்வேறுபட்ட இன்னல்கள், துயரங்களை அனுவித்த உங்களை என்றுமே மறந்து விடவில்லை. மாறாக துரித அபிவிருத்திப் பாதையின் ஊடாக சகலவித வரப்பிரசாதங்களையும் நீங்கள் அனுபவிக்கும் நாள் விரைவில் வரும். அதன் ஆரம்பக் கட்ட நடவடிக்கையின் பொருட்டு மிக அண்மையில் சமுர்த்தி மற்றும் திவிநெகும திட்டங்கள் வறுமை கேட்டிற்கு உட்பட்ட எமது பயனா ளிகளுக்காக மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு மிக துரிதமான அபிவிருத்தி செயற்றிட்டங்கள் கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டின் ஏனைய மாவட்டங்கள் போன்று நிதி ஒதுக்கீடுகள், சமுர்த்தி மானியங்கள், சமுர்த்தி வங்கி நடவடிக்கைகள், ஆத்மீக, கலாசாரத்திட்டங்கள், குடும்பநல அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள், சமூக அபிவிருத்தித் திட்டங்கள், சமுர்த்தி சமூக பாதுகாப்பு சிறுவர் செயற்பாட்டு திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள், உட்கட்டமைப்பு பணிகள் போன்ற சகல சமுர்த்தித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே, இந்தப் புதிய வருடத்தில் உட்பிரவேசிக்கும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒரே நோக்குடன் சுபீட்சமிகுவளமான நாட்டினை கட்டியெழுப்புவதுடன் எதிர்காலமாணவ செல்வங்களிடம் வளமிகு சமாதான நாட்டினை மகிழ்வுடன் கையளிப்போம். அதற்கு பொருளாதார அமைச்சின் கீழ் இயங்கும் சமுர்த்தி மற்றும் திவிநெகும திணைக்கள மக்களின் சேவைகளுக்காக என்றுமே காத்திருக்கும் எனவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# பன்றி நெல்களின் தாக்கம் அதிகரிப்பு

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களில் பன்றி நெல் எனப்படும் களைகளின் பெருக்கம் வெகுவாக அதிகரித்து காணப்படுகிறது என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முரசு மோட்டை பகுதியில் வயல் நிலங்களில் முற்று முழுதாக பன்றி நெல் வளர்ந்து காணப்படுவதுடன் தொடர்ந்தும் ஏனைய வயல் நிலங்களிலும் இப்பன்றி நெல் எனப்படும் களைகளின் பெருக்கம் அதிகரித்து வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

எனவே இத்துறை சார் அதிகாரிகள் இதனைக் கட்டுப்படுத்த முன் வர வேண்டுமென்பதே விவசாயிகளின் வேண்டுகோளாக உள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை பதற வைத்த வெடிவிபத்து சுற்றுப்புறத்தை அதிர வைத்தது-70 பேர் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள உரத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 70 பேர் வரை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் 200 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இவ் இரட்டை வெடிப்புச் சம்பவத்தில் தொழிற்சாலை இடிந்து வீழ்ந்ததுடன் தீப்பற்றி எரிந்துள்ளது. தொழிற்சாலையினை சூழவுள்ள 45 மைல் பிரதேசத்தை அதிர






வைத்த குறித்த வெடிவிபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் வாகோ நகரின் புறநகரில் மிகப்பெரிய உரத்தொழிற்சாலை அமைந்துள்ளது. நேற்றிரவு அங்கு உர தயாரிப்பு பணிகள் வழமை போன்று தீவிரமாக நடந்து கொண்டிருந்தன.

நேற்றைய தினம் சுமார் 8 மணியளவில் உரத் தொழிற்சாலையின் முக்கிய பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து இரசாயன கலவைகள் வெடித்துச் சிதறியுள்ளன.

இதையடுத்து பயங்கரசத்தத்துடன் தொழிற்சாலைக்குள் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அடுத்த சில விநாடிகளில் மற்றுமொரு பயங்கர வெடிவிபத்தும் ஏற்பட்டுள்ளது.

இரு வெடி விபத்துக்கள் காரணமாக உரத் தொழிற்சாலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததுடன் ஏனைய பகு தியில் தீ பிடித்து எரிந்துள்ளது. சிறிது நேரத்தில் அந்த உரத்தொழிற்சாலை முழுவதும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. வெடி விபத்துக்கள் ஏற்பட்ட சத்தம் 45 மைல் சுற்றளவுக்கு கேட்டுள்ளதாக குறித்த மிக சக்தி வாய்ந்த இந்த வெடி விபத்துக்களால் டெக்சாஸ் உரத்தொழிற்சாலை சுற்றுப்பகுதி முழுவதும் நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல குலுங்கி, இடிந்து விழுந்ததுடன் உரத்தொழிற்சாலை அருகே இருந்த ஒரு பாடசாலையும் தாதியர் விடுதியும் முற்றிலும் இடிந்து தரை மட்டமாகி உள்ளது.

மேலும் பல்லாயிரக்கணக்கான வீடுகளும் இடிந்து விழுந்தமையால் இடிபாடுகளில் நூற்றுக்கணக்கானவர்கள் சிக்கிக் கொண்டனர்.

வெடி விபத்துப் பற்றி தகவல் கிடைத்ததும் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஏனைய நகரங்களில் இருந்து தீயணைப்பு வண்டிகள் விரைந்து சென்று தீயை அணைத்தனர். மீட்புப் பணிகளும் முடுக்கி விடப்பட்டன.

இடிபாடுகளில் சிக்கி கிடந்தவர்களைமீட்டுமருத்துவமனைக்கு அழைத்து செல்ல 50 இற்கும் மேற்பட்ட அம்புலன்ஸ் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உரத்தொழிற்சாலை அருகில் அவசரகால மருத்துவமனை அமைக்கப்பட்டும் சிகிச்சைகள் கொடுக்கப்பட்டன. மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர்களை வேறு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல 6 உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் நவீன எந்திரங்கள் மூலம் இடிபாடுகள் அகற்றப்பட்டன.

குறித்த வெடி விபத்தில் சிக்கியும் இடிபாடுகளில் சிக்கியும் 60 முதல் 70 பேர் வரை பலியாகி விட்டதாக தகவல்கள்வெளியாகியுள்ளது. மேலும் 200 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடங்களில் மீட்பு பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றது. (அ-5)

# நச்சு கலந்த மர்மக் கடிதம்; கதிகலங்கிய வெள்ளை மாளிகை

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பெயருக்கு ரிசின் எனப்படும் அதி பயங்கர நச்சுப் பொருள் இடப்பட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் அமெரிக்காவில் பெரும் பரபரப்பு தோன்றியுள்ளது.

ஒபாமாவின் பெயருக்கு அனுப்பப்பட்ட அக் கடிதத்தில் காணப்பட்ட ரிசின் எனப்படும் ரவைகள் காற்றில் கலந்து சுவாசப் பைக்குள் சென்றால் அதிபயங்கர நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உயர்ஸ்தானிகர் ரோஜர் விக்கர் என்பவரிற்கும் இவ்வாறான கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அக் கடிதங்களில் உள்ள நஞ்சு கையில் ஒட்டிக் கொண்ட பின்னர் எச்சில் தொடுவதற்கு விரலை நாவில் வைக்கும் போது உடல் முழுவதும் பரவி மரணத்தை ஏற்படுத்தக் கூடியது எனவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அல்கொய்தாவின் தாக்குதலை தொடர்ந்து ஆந்தராக்ஸ் எனப்படும் நச்சுக்கிருமி பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதைதொடர்ந்துவெள்ளை மாளிகைக்கு வரும் கடிதங்கள், பொதிகள் என்பன வெள்ளைமாளிகையிலிருந்து சற்றுத் தொலைவில் வைத்து அதிகாரிகளினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே வெள்ளைமாளிகைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்நிலையிலேயே குறித்த கடிதங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது ரிசின் நச்சுப்பொருள் காணப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதேவேளை குறித்த இரு கடிதங்களையும் ஒரே நபரே அனுப்பி வைத்துள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கு புலனாய்வுத்துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)

# அமெரிக்காவின் அழைப்பிற்கு மிரண்டது வடகொரியா

## பேசுவதற்கு தயாரென திடீர் அறிவிப்பு

(பியாங்யாங்)

அமெரிக்காவுடன் பேச்சு நடத்தத் தயாா நிலையில் உள்ளதாக வடகொரியா திடீர் அறிவிப்பை விடுத்துள்ளது.

அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து சமீபத்தில் போர் பயிற்சிகளில் ஈடுபட்டதன் காரணமாகவும் ஐக்கிய நாடுகள் விதித்திருந்த பொருளாதார தடைகளை எதிர்த்தும் வடகொரியா தனது அண்டை நாடான தென்கொரியா மீதும் அதன் நட்பு நாடான அமெரிக்கா மீதும் போர் பிரகடனம் செய்தது.

இதனை தொடர்ந்து கொரிய தீபகற்பத்தில் நிலவி வரும் போர் பதற்றத்தை தணிக்க வடகொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

இதை அடுத்தே அமெரிக்காவுடன் நிபந்தனைகளுடனான பேச்சுவார்த்தைக்கு தயார் என வடகொரியா அறிவித்துள்ளது.

இதன்போது பேச்சுவார்த்தையும் போரும் ஒரே சமயத்தில் நடைபெறாது என வடகொரியா தெரிவித்துள்ளது. மேலும் அமெரிக்காவும் அதன் கைப்பாவையான தென்கொரியாவும் எங்கள் மக்கள் மற்றும் இராணுவத்திடம் இருந்து அடிவாங்குவதை தவிர்க்க உண்மையிலேயே பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால் அவர்கள் உறுதியான முடிவினை எடுக்க வேண்டும் என வடகொரியா அறிவித்துள்ளது. (அ-5)

# தலிபான்கள் கோரத் தாக்குதலுக்கு ஆப்கான் அரசு கடும் கண்டனம்

வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 7 பொதுமக்கள் உடல் சிதறி பலியானதுடன் மேலும் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அரசு மற்றும் நேட்டோ படைகளுக்கெதிராக தலிபான்கள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஹெறாட் மாகாணத்தில் ஷிந்தாந்த் நகரில் நேற்று முன்தினம் வீதியோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் உழவு இயந்திர வாகனத்தில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் 7 பேர் கொல்லப்பட்டு 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு தலிபான் களே காரணம் என ஆப்கான் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் பேச்சுவார்த்தைக்கு ஒருபுறம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் பொதுமக்களின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (அ-5)

# முஷாரப்பை கைது செய்ய உத்தரவு

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கைது செய்யுமாறு இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பர்வேஸ் முஷாரப் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பு நிலுவையில் உள்ள நிலையிலேயே அவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக பர்வேஸ் முஷாரப் அறிவிக்கப்பட்டிருந்தார். நீதிமன்றில் ஆஜராகி இருந்த முஷாரப் அவரது தனியார் பாதுகாப்பு வீரர்களின் உதவியோடு நீதி மன்றில் இருந்து தப்பித்து வெளியே சென்றிருந்ததாக தெரியவருகின்றது. (அ-5)

# சிறையில் இருப்பதை விரும்பும் ஜேர்மன் குற்றவாளிகள்

ஜேர்மனியில் சிறுசிறு குற்றங்களில் ஈடுபடுவோர் ஐந்து யூரோ கூட அபராதம் செலுத்த விரும்பாமல் சிறைச்சாலைகளுக்குச் செல்லவே ஆசைப்படுகின்றனர் என்று ஜேர்மனிய ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்வோர், தவறான இடங்களில் வண்டியை நிறுத்துவோர், கடைகளில் பொருட்களைத் திருடுவோர் போன்ற சிறு தவறுகளில் ஈடுபடுவோர் அபராதம் செலுத்துவதை விட சிறையில் சில நாட்கள் தங்கி இருக்கவே விரும்புகின்றனர்.

இவ்வாறு ஆச்சென் சிறைச்சாலைக்கு கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஏழு முறை சென்று திரும்பிய 67 வயதுடைய ஹீன்ஸ் கூந்தர் கூப்பர் என்பவர் இது குறித்து தெரிவித்துள்ள போது சிறைச்சாலைக் கட்டடம் புத்தம் புதியதாகவும் அதில் உள்ள கழிப்பறை, குளியலறை வசதிகள் நவீன மானவைகளாகவும் உள்ளது. மேலும் ஏழு வகை ரொட்டிகளும் பரிமாறப்படுகிறது என்று சிறை தரும் சந்தோசங்களைப் பட்டியலிட்டு குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கூப்பரை போன்று ஆயிரக் கணக்கானோர் ஜேர்மனி முழுக்க சிறைகளில் மகிழ்ச்சியாக பொழுதைப் போக்கும் அதேவேளை அரசு சிறைக்கைதிகளுக்காக நாளொன்றுக்கு 111 யூரோக்களை ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்புத்தினரும் குறிப்பிடுகின்றனர். (அ-5)

# பொஸ்டன் நகர குண்டு வெடிப்பு படப்பிடிப்பு கருவியில் சூத்திரதாரி

## கைது செய்தது அமெரிக்க பொலிஸ்

(நியூயோர்க்)

அமெரிக்காவை அதிர வைத்த பொஸ்டன் நகர குண்டுத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவரை அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிகவும் நுட்பமான முறையில் மிகவேகமாக விசாரணைகளை மேற்கொண்டதன் மூலமே மேற்படி சந்தேகநபரை கைது செய்துள்ளதாக தெரியவருகின்றது.

பொஸ்டன் நகரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியின்போது நிகழ்ந்த குண்டு வெடிப்பு தாக்குதலில் 3 பேர் பலியானதுடன் 176 பேர் படுகாயமடைந்திருந்தனர்

இதன்போது கறுப்புநிற கைப்பையில் குக்கர்களில் அடைக்கப்பட்ட வெடிபொருட்களை தானியங்கிக் கருவி மூலம் இயக்கி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தடயவியல் சோதனையின் மூலம் தெரிய வந்தது.

இதனையடுத்து குண்டு வெடித்த இடத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள சி.சி.டி.வி. ஒளிப்படப்பிடிப்பு கருவியின் பதிவுகளை பொலிஸார் தீவிரமாக சோதனையிட்டுள்ளனர்.

குறிப்பாக கறுப்பு பைகளுடன் செல்லும் நபர்களின் நடமாட்டத்தை முக்கியமாக கண்காணித்தபொழுது குண்டு வெடித்த இடத்தில் ஒருவர் கறுப்பு பையை வைத்துவிட்டு சென்றது 2 படப்பிடிப்பு கருவிகளில் பதிவாகியிருந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபரைப் பற்றிய அடையாளங்களை சேகரித்த பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

எனினும் அவர் யார், எந்த நாட்டைச் சேர்ந்தவன், இந்த தாக்குதலை நடத்தியது ஏன் என்பது குறித்த விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணலும் (தவளை) தன்வாயால் கெடும். *– தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமெரிக்காவோடு முண்டுவது விதியின் திருவிளையாட்டே

இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி மரணமடைவதற்கு முன்னதாக நடந்த கதை இது. ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பின்னர் இதைக் கூறியவர் இந்தியத் தேர்தல் தலைமை ஆணையராக இருந்த சேசன் அவர்கள்.

குண்டு வெடிப்பில் ராஜீவ் காந்தி மரணமடைவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னதாக பிரதமர் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் கிடைக்கிறது.

அந்தக் கடிதம் காஞ்சி காமகோடி பீடாதிபதியினால் எழுதப்பட்டிருந்தது. அதில் மரியாதைக்குரிய நமது நாட்டுப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு இப்போது காலம் அவ்வளவு நல்லதல்ல. அவரின் ஆயுளுக்கு ஆபத்து. மிகவும் அவதானமாக இருக்குமாறு அவருக்குத் தெரியப்படுத்துங்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

காஞ்சி காமகோடி பீடாதிபதியால் எழுதப்பட்ட அந்தக் கடிதம் தொடர்பில் பிரதமர் அலுவலகம் விழித்துக் கொண்டது. பிரதமர் ராஜீவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றி காஞ்சி காமகோடி பீடம் தெரிவித்துள்ள விடயத்தை ராஜீவ் காந்திக்குத் தெரியப்படுத்தாமல் அதற்கான பரிகாரத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்த பிரதமர் அலுவலகம், சேசனை அவர்களை காஞ்சி காமகோடி பீடத்துக்கு அனுப்பி வைத்தது.

பிரதமர் ராஜீவுக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தைத் தடுப்பது எங்ஙனம்? அதற்கேதேனும் பரிகாரம் உண்டா என்று காஞ்சிப் பெரியவரை சேசன் வினவினார்.

அதற்கு இது விதியின் பாற்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்திக்கு அகால மரணம் என்பது உறுதியாகிவிட்டது. எனினும் குருவாரூருக்குச் சென்று நம்பூதிரி என்ற சோதிடரைச் சந்தித்து ஏதேனும் பரிகாரம் இருக்கின்றதா என்பதைக் கேட்டறியுங்கள் என்று கூறப்பட்டது.

இந்த விபரங்களைத் தெரிந்து கொண்ட சேசன், குருவாரூருக்குச் சென்று நம்பூதிரியைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகியிருந்த வேளை, அந்த நள்ளிரவுப் பொழுதில் குண்டு வெடிப்பில் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை என்ற செய்தி வருகிறது.

என்ன செய்வது! விதியை வெல்லுவேன் என்று ஒருவன் சொல்வானாக இருந்தால் அதுவும் விதிதான் என்று கவியரசு கண்ணதாசன் கூறியதுபோல, விதி வெல்லப்பட முடியாதென் பது பிரதமர் ராஜீவ் காந்தியின் விடயத்திலும் உண்மையாயிற்று.

தங்கள் உயிருக்கு ஆபத்தென்பதை ராஜீவ் காந்திக்குத் தெரியப்படுத்தாமல் பிரதமர் அலுவலகம் மறைத்ததன் ஊடாக விதி தன் வலிமையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டது எனலாம்.

அங்கு அப்படி விளையாடிய விதி இங்கோ அமெரிக்காவோடு முரண்டுபிடிக்க வைத்து தன் விளையாட்டை காட்டப் போகிறது என்று நாம் சொன்னால், ஆட்சியில் உள்ளவர்கள் கேட்பதற்கு விதி விடவா போகிறது?

அடி விழுவது அமெரிக்காவால் என்பது விதியாயின், இறந்துபோன காஞ்சிப் பெரியவர் எழுந்து வந்து கடிதம் எழுதினாலும் கேட்பரோ எங்கள் ஆட்சியாளர்கள்? இல்லவே இல்லை.

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு உதவிப்பணிப்பாளர் டாக்டர் அமிர்தலிங்கம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழில் 17.04.2013 அன்று யாழ்ப்பாண அரச அதிபருக்கு எழுதும் அவசர மடல் என வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பாக அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பண்ணைக் கால்நடை வைத்திய சாலை பற்றிய விடயம் தொடர்பில்,

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அனுப்பியுள்ளவிளக்கம்இங்குதரப்படுகிறது.

பண்ணையில் இயங்கும் அரச கால்நடை வைத்தியசாலையில் வேலை நடைபெறுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்ணையில் இருப்பது அரச கல்நடை வைத்தியர் யாழ்ப்பாண பிராந்திய கந்தோராகும். இப்படி பதின் மூன்று பிரதேச செயலக மட்டத்திலும் கால்நடை வைத்திய கந்தோர்கள் இயங்கிவருகின்றது.

கால்நடை வைத்தியர்கள் சிகிச்சை மட்டுமன்றி வெளிக்களத்திட்ட வேலைகளிலும் ஈடுபடுவதால் காலை 8.15 மணி முதல் 11.00 மணிவரை கந்தோருக்கு வரும் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள்.

11.00 மணிக்குப் பின்னர் அவர்களுக்குரிய வெளிக்கள வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். மிகவும் அவசியமான சிகிச்சை எனில் மட்டுமே 11.00 மணிக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும்.

தங்களால் பிரசுரிக்கப்பட்ட செய்தி மிகமிக தவறானது. தாங்கள், கால்நடை வைத்திய நிலையம் யாழ்ப்பாணத்தின் வேலைகளை பதிவேடுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# இடம்பெயர்ந்த மக்களின் விபரங்கள் திரட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் விபரங்கள் பிரதேசசெயலகம் ஊடாக ஜனாதிபதி செயலக விசேட செயலணியால் திரட்டப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவிலும் இந்த நடவடிக்கை துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆங்கில மொழியில் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளபடிவத்தில் குடும்ப விபரங்கள், இடம்பெயர்ந்துள்ள காலம், தற்போதைய வசிப்பிடம் மற்றும் எந்தெந்த இடங்களில் காணி உள்ளது போன்ற விடயங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆங்கில மொழியில் இந்த படிவம் விநியோகிக்கப்படுவதால் மக்கள் மத்தியில் குழப்ப நிலை காணப்பட்டு வருவதாக வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் சஜிவனால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன், ஜனாதிபதி செயலக விசேட செயலணியால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் தகவல்களை இலகுவில் விளங்கிக் கொள்ளும் நோக்கில் ஆங்கிலத்தில் குறித்த படிவம் விநியோகிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (செ-6)

# சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு செம்மணியில் காணி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு செம்மணிப் பகுதியில் காணிவழங்குவதற்கானநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருவதாக நல்லூர் பிரதேச செயலர்ப.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர்பிரதேசசெயலகஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்டின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டிடம் அமைப்பதற்காக 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால்கட்டிடம்அமைப்பதற்குகாணியில்லை எனவும் இது தொடர்பில் பிரதேச செயலரிடம் முன்பே அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

இதனையடுத்தே பிரதேச செயலர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். அத்தோடு அரியாலை, பூம்புகார் போன்ற பகுதிகளில் காணிகள் இருக்கின்றபோதும் அங்கு குறித்த வைத்திய அதிகாரி பணிமனையை அமைப்பதனால் பயன்பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும். எனவே தான் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் உள்ள காணியை வழங்குவது தொடர்பில் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (செ-6)




உலக வாழ்க்கை துன்பமானது என்று எவரும் நினைப்பதில்லை. ஆனால் துன்பங்களைத் தொடர்ந்து எதிர்கொள்ளும் போது உலகே மாயம், வாழ்வே மாயம் எனப் புலம்பித் திரிபவர் பலருளர். இந்நிலையை மணிவாசகர் ஒரு பாடலிலே தெளிவாக விளக்கியுள்ளார். மனிதனுடைய துன்பங்கள் யாவும் அவனுடைய வினையால் உண்டாகின்றன. அந்த வினைகளுக்கு முக்கிய காரணம் ஐம்புலன்களாகும். மணிவாசகர் ஒரு பாடலில் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். தன்னுடைய துன்பத்திற்குக் காரணம் ஐம்புல நுகர்ச்சியே என்பதை அவர் நன்குணர்ந்தவர். எனவே தன்னுடைய அனுபவத்தை ஓர் உவமை மூலம் விளக்கியுள்ளார்.

ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டேன் என ஓர் உவமையாக அவர் காட்டும் காட்சி எல்லோரும் உணரக்கூடியது. பெரிய யானைகள் ஒன்றோடொன்று செய்கின்ற கொடிய போரிலே அகப்பட்ட சிறிய செடிபோல ஐம்புலன்களால் அலைக்கப்பட்டு வருந்தினேன் என்று கூறுகின்றார். வெம்போர் என்பது கோபத்தோடு செய்கின்ற பெரிய போராகும். குறுந்தூறென்பது மிகச்சிறிய செடியைக்குறித்தது. பல யானைகளின் கால்களால் ஒரு சிறிய செடி மிதிக்கப்படும்போது அது அடையும் துன்பம் மிகப்பெரியது. அதுபோல மீள முடியாத துன்பங்களை ஐம்புலன்களும் தரவல்லவை. இத்துன்பத்திலிருந்து விடுபடுவதற்குரிய வழியையும் மணிவாசகர் கூறியுள்ளார்.

இறைவனை இடைவிடாது வழிபாடு செய்தால் வினைதீரும். எனவே இறைவனைப் பற்றியறிய எல்லோரும் விரும்புவர். மணிவாசகர் தனது இறையனுபவத்தை, உண்மையனுபவத்தை பாடலிலே மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். இறைவன் தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்தவன் என்கிறார். தேன், பால், கன்னல், அமுதம் என்பன இனிமையானவை. ஆனால் ஒவ்வொன்றின் சுவையும் வேறுபட்டவை. தேன் பூக்களிலிருந்து பெறப்படுவது. பால் பசுவிடமிருந்து கிடைப்பது. கன்னல் என்பது கரும்பு. ஒரு தண்டுப் பயிர். அமுதம் பாற்கடலில் கடைந்தெடுக்கப்படுவது. மணிவாசகர் இவற்றில் முதன் மூன்றின் சுவையையும் நன்கறிந்தவர். அமுதத்தின் சுவையை அறியாமல் கேள்வியுற்றவர். வாய்ச்சுவையால் இன்பம் காண்போருக்கு அவர் கூறும் சுவையை நன்குணர முடியும். பக்திவயப்பட்டோர் இறைவனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இத்தகைய [illegible]த்தை உணருவர்.

இந்த இன்பங்களுக்கு மேலாகத் தன் உடலில் ஏற்படும் மாற்றம் ஒன்றையும் மணிவாசகர் பாடலிலே விளக்கியுள்ளார். எனது உடலின் ஊனினையும் திண்பொருளாகிய எலும்பினையும் உருகிக் கரையச் செய்கின்ற அறிவொளி இன்ப உருவானவனே எனத் தன் அனுபவத்தைக் கூறியுள்ளார். எலும்பையும் ஊனையும் உருக்கும் இறைவன் தோற்றமும் நினைப்பும் அவரைப் பக்தியுணர்வில் திளைக்கச் செய்தன. இந்த அனுபவம் ஐம்புலன்களையும் ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தி இறையுணர்விலே

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஒன்றியிருப்பவருக்கே சாத்தியமாகும். திருவாசகப் பாடல்களைப் படித்த மேலைத்தேயத் தமிழறிஞரான ஜி.யு. போப் எலும்பையும் உருக்கும் பாடல்களெனக் கூறியுள்ளார். பிற மதத்தவரான அவரை மணிவாசகரது பக்திமொழி உள்ளமுருக வைத்துள்ளது. அது எம்மையும் பக்தி நிலைக்கு இட்டுச் செல்லும்.

ஆனை வெம்போரில் குறுந்தூறென
புலனால் அலைப் புண்
டேனை யெந்தாய் விட்டிடுதி கண்டாய்
வினையேன் மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையு மொத்து
ஊனையும் என்பினையும் உருகா
நின்ற ஒண்மையனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

Vs

இரவு 8 மணி

PEPSI IPL

### ஒரேஞ் தொப்பி (அதிக ஓட்டங்கள்)

1. விராட் கோலி – 321
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. தினேஸ் கார்த்திக் – 254
மும்பை இந்தியன்ஸ்
3. கௌதம் கம்பீர் – 235
கொல்கத்தா நைட் றேடர்ஸ்



### ஊதா தொப்பி (அதிக விக்கெட்டுக்கள்)

1. சுனில் நரைன் – 11
கொல்கத்தா நைட் றைடர்ஸ்
2. அனிற் மிஸ்ரா – 9
சன் ரைஸர்ஸ்
3. கெவன் கூப்பர் – 9
ராஜஸ்தான் றோயல்

### சிறந்த பந்துவீச்சு

1. சுனில் நரைன் – 4/13
கொல்கத்தா நைட் றைடர்ஸ்
2. அனிற் மிஸ்ரா – 4/19
சன் ரைஸர்ஸ்
3. உமேஸ் யாதேவ் – 4/24
டில்லி டேர்டேவில்ஸ்

### அதிக சிக்ஸர்கள்

1. கிறிஸ் கெய்ல் – 16
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. விராட் கோலி – 11
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
3. ரோகித சர்மா – 10
மும்பை இந்தியன்ஸ்

### ஒரு போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டம்

1. விராட் கோலி – 93*
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. கிறிஸ் கெய்ல் – 92*
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
3. மைக்கல் ஹசி – 86
சென்னை சுப்பர் கிங்ஸ்


# வென்றாலும்... தோற்றாலும்... வருவேன்



பிரபல நடிகையும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் இணை உரிமையாளருமான ஷில்பா ஷெட்டி ஒவ்வொரு போட்டிக்கும் தவறாமல் வருகிறார். கூடவே அவரின் அன்புத் தங்கையும் சிட்டாக வலம்வருகிறார். தமது அணியின் வெற்றிக்காக விக்கெட்டுகள் வீழ்த்தப்படும் போதும், சிக்ஸர், பவுண்டரிகள் பறக்கும்போதும் தன்னை அறியாமலே துள்ளிக் குதித்து வீரர்களை உற்சாகமூட்டி வருகின்றார் ஷில்பா ஷெட்டி.

# தடையை நீக்க முடியாது!

## - விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றம்



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் சல்மான் பட், முகமது ஆசிப் ஆகியோருக்கு ஐசிசி விதித்த தடையை நீக்க முடியாது என்று கூறி அவர்களின் மனுவை தள்ளுபடி செய்தது விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றம் (சிஏஎஸ்).

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. அப்போது லார்ட்ஸில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பணத்தைப் பெற்றுக கொண்டு நோபோல் வீசியதாக அப்போதைய பாகிஸ்தான் தலைவர் சல்மான் பட், வேகப் பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப், முகமது ஆமிர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மூவருக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சல்மான் பட்டுக்கு 10 ஆண்டுகளும், முகமது ஆசிப்புக்கு 7 ஆண்டுகளும், முகமது ஆமிருக்கு 5 ஆண்டுகளும் கிரிக்கெட தொடர்புடைய எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து சல்மான் பட், முகமது ஆசிப ஆகியோர் தங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து சுவிற்சர்லாந்தின் லாசன்னே நகரில் உள்ள சிஏஎஸ்ஸில் வழக்குத் தொடர்ந்தனர்.

அதில், 'எங்களுக்கு விதிக்கப்பட்ட தடை, எங்களின் கிரிக்கெட் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது' என்று கூறியிருந்தனர். தனக்கு விதிக்கப்பட்ட தடையை 5 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று சல்மான் பட்டும், முற்றிலுமாக தடையை நீக்க வேண்டும என்று முகமது ஆசிப்பும் கோரியிருந்தனர்.

அதை விசாரித்த சிஏஎஸ், 'தடையை நீக்க உத்தரவிடுமாறு மேற்கண்ட இரு வீரர்களும் கேட்க முடியாது.

அதேநேரத்தில் தங்களின் தண்டனையை குறைக்குமாறு அவர்கள் இருவரும் ஐசிசியிடம் கோரிக்கை விடுக்கலாம்' என்று கூறி அவர்களின் மனுவை தள்ளுபடி செய்துள்ளது நீதிமன்றம்.

## இலங்கை கிரி.சபையின் தலைவராக ஜயந்த தர்மதாச

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக ஜயந்த தர்மதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார். அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜயந்த தர்மதாஸ, 2005ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவின் தலைவராக செயற்பட்டுள்ளார். இதேவேளை, செயலாளராக நிஷாந்த ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இந்தப் பதவிக்கு போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## ஐ.பி.எல்.அணிகள் பெற்ற புள்ளிகள்

IPL-2013

| Teams | Mat | Won | Lost | Tied | Pts | Net RR |
|---|---|---|---|---|---|---|
| Rajasthan | 5 | 4 | 1 | 0 | 8 | +1.06 |
| Bangalore | 6 | 4 | 2 | 0 | 8 | +0.36 |
| Hyderabad | 6 | 4 | 2 | 0 | 8 | -0.22 |
| Mumbai | 5 | 3 | 2 | 0 | 6 | +0.05 |
| Punjab | 4 | 2 | 2 | 0 | 4 | +0.43 |
| Kolkata | 5 | 2 | 3 | 0 | 4 | +0.14 |
| Chennai | 4 | 2 | 2 | 0 | 4 | -0.12 |
| Pune | 6 | 2 | 4 | 0 | 4 | -0.78 |
| Delhi | 5 | 0 | 5 | 0 | 0 | -0.67 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் முழங்கால் உபாதையில் பீற்றர்சன்

இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு ஏற்பட்ட உபாதை இன்னமும் குணமாகாததால் கெவின் பீற்றர்சன் நியூசிலாந்திற்கெதிரான தொடரில் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் நியூசிலாந்தில்இடம்பெற்ற டெஸ்ட் தொடரின்போது உபாதைக்குள்ளான கெவின் பீற்றர்சன், நியூசிலாந்திலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்தார்.

அவருக்கு 6 வாரங்கள் ஓய்வு தேவையென அறிவிக்கப்பட்டபோதிலும், தற்போது அவருக்கு மேலதிக வாரங்கள் தேவைப்படுவதாகவும், எனவே மே மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நியூசிலாந்திற்கெதிரான தொடரில் அவர் பங்குபற்றமாட்டார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது முழங்காலில் கணிசமானளவு உபாதை ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரத்தில் மீண்டும் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்படுமெனவும், அதன் பின்னர் அவரது மேலதிக ஓய்வு குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படுமெனவும் இங்கிலாந்துக் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.



### பங்களாதேஷ் – சிம்பாப்வே

## முதல் டெஸ்ட் ஆரம்பம்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் பிரண்டன் டெய்லர் சதம் அடித்து கைகொடுக்க, சிம்பாப்வே அணி சரிவிலிருந்து மீண்டது.

சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் ஹராரேயில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில வெற்றிபெற்ற பங்களாதேஸ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதன்படி முதல் இன்னிங்சை ஆரம்பிதத சிம்பாப்வே அணிக்கு சிபண்டா (5), மருமா (10) ஜோடி ஏமாற்றியது. அடுத்து வந்த ஹாமிலடன் மசகட்சா (25) நிலைக்கவில்லை. பின் இணைந்த அணித்தலைவர் பிரண்டன் டெய்லர், வாலர் ஜோடி பொறுப்பாக ஆடியது. அபாரமாக ஆடிய வாலர், தனது 2ஆவது டெஸ்ட் அரைசதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 127 ஓட்டங்கள் சேர்த்தபோது வாலர் (55) ஆட்டமிழந்தார். மறுமுனையில் அசத்திய பிரண்டன் டெய்லர், டெஸ்ட் அரங்கில் தனது 3ஆவது சதத்தை பதிவு செய்தார்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்சில் சிம்பாப்வே அணி 4 விக்கெட்டுக்கு 217 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பிரண்டன் டெய்லர் (105), எல்டன் சிகும்புரா (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பங்களாதேஷ் சார்பில் ரோபியுல் இஸ்லாம் 2, ருபெல் ஹொஸைன், எனாமுல் ஹேக் ஜூனியர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

# டில்லியை வீழ்த்தி சென்னை அபாரம்

டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 86 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல். தொடரின் 24-வது போட்டி டில்லியில் உள்ள பெரோஷ்ஸா கொட்லா மைதானத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் உள்ளூர் அணியான டில்லி டேர்டெவில்ஸ் அணி, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மைக்கல் ஹசியின் 65 ஓட்டங்களின் துணையுடன் 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை எடுத்தது.

டில்லி அணியின் பந்துவீச்சில் பதான், யாதவ், மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

170 என்கின்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டெவில்ஸ் அணியால் 17.3 ஓவர்கள் வரையே தாக்குபிடிக்க முடிந்து வெறும் 83 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுத்துக் கொண்டது.

டில்லி அணி சார்பில் அதிகபட்ச ஓட்டங்களான 31 ஓட்டங்களை கேடர் யாகவ் பெற்றுக் கொண்டார்.

சென்னையின் பந்துவீச்சில் மோகித் சர்மா 3 ஓவர்களில் 10 ஓட்டங்களைக் கொடுத்து முக்கிய 3 விக்கெட்டுக்களை கொய்தார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சென்னையின் மைக்கல் ஹசி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் சென்னை அணி 2 புள்ளிகளை தனதாக்கிக் கொண்டது.

மறுபக்கத்தில் தொடரிலிருந்து வெளியேறும் முதலாவது அணி நாங்கள் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் கங்கணம் கட்டி ஆடுகிறார்களா என்று டில்லி அணியின் ஆட்டத்தைப் பார்க்கும் போது எண்ணத் தோன்றுகிறது.

# ஆஸியிலிருந்து 39 இலங்கையர் நாடு திரும்பினர்

(கான்பரா)

படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்து கோரிச் சென்ற மேலும் 39 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் இவர்கள் நேற்று நாடு திரும்பியதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரண்டன் ஓ கொன்னர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 13-ம் திகதி தொடக்கம் இதுவரை 1,004 இலங்கையர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இவர்களில் 795 பேர் சுய விருப்பின் பேரில் திரும்பியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்பவர்களுக்கு இது ஒரு பலமான செய்தியை வழங்கும் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-11)

## அல்-கொய்தாவா?...

நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவின் இணையத்தளம் ஒன்று ஈரானிய புலனாய்வுத் தகவல் தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ள போதும் அது குறித்து அமெரிக்கா எம்மிடம் உத்தியோகபூர்வமாக எதையும் அறிவிக்கவில்லை.

இதேவேளை, இது குறித்து நாம் எமது வெளிவிவகார அமைச்சினூடாக அமெரிக்காவிடம் வினவினோம்.

அது தொடர்பில் அமெரிக்காவும் எமக்கு எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். (செ-11)

## குடும்பஸ்தரை...

வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இருப்பினும் கடந்த நான்கு நாட்களுக்கு மேலாக அவர் வீடு வந்து சேரவில்லை. இந்நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் காணாமல் போனமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதா என இணைப்பாளர் ரி.கனகராஜிடம் கேட்டபோது, முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை எனப் பதிலளித்தார்.

அத்தோடு யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 4-ம் திகதி காணாமல் போனதாகச் செய்யப்பட்ட முறைப்பாடும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தாயாரின் வீட்டிற்கு குறித்த குடும்பஸ்தர் சென்று தங்கியிருந்ததாகவும் அவரை யாரும் கடத்திச் செல்லவில்லை எனவும் காணாமல் போனதாகக் கூறப்பட்டவரின் மனைவி தெரிவித்துள்ளார் என இணைப்பாளர் கூறினார். (செ-6)

# தனபாலன் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான துடுப்பாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டி யாழ்.மாவட்டத்தில் 19 வயது பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியாக வருடாவருடம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த சுற்றுப் போட்டியின் 2013ஆம் ஆண்டுக்கான போட்டி இன்று சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து அரையிறுதி,இறுதிப் போட்டிகள் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

## கோத்தபாய...

மற்றும் புத்தகங்களை வழங்கி வைப்பார்.

கனடாவில் வாழ்கின்ற இலங்கைப் பிரஜைகளின் உதவியுடனேயே இவை மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட இருப்பதாகத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (செ-6)

## வடக்கு தேர்தல்...

என்று அர்த்தமா? என நகைச்சுவையாகவும் கேட்டார்.

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறுமென ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தல் இடம்பெறும் காலம் குறித்து உரிய நேரத்தில் மக்களுக்கு அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## மின்கட்டண...

அரசாங்கம் கூறிவந்தது.

ஜனாதிபதி புத்தாண்டுக்கு மக்களுக்கு வாழ்த்துக் கூறினார். நல்ல நேரத்தில் அனைத்தையும் செய்துவிட்டு, புத்தாண்டு நல்ல நேரத்திலேயே அரசாங்கம் தனது வேலையைக் காட்டியுள்ளது.

புதுவருடத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதனால் இந்த புதுவருடம் பொது மக்களுக்கு நல்ல புதுவருடமாக இருக்கப் போவதில்லை. இதனை சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. கடந்த காலங்களில் அரசாங்கம் பல அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்தது. அதன் பின்னர் மின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன எனவும் ரில்வின் சில்வா கூறியுள்ளார். (செ-11)

## அதிர்ச்சி...

அல்லாது மின் உற்பத்திச் செலவு மிக அதிகமாக உள்ளது என்பதை இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டுகிறது.

**விலையேற்றதின் காரணம் என்ன?**

மின் கட்டண அதிகரிப்புக்கான காரணங்கள் குறித்து பி.பி.சி. தமிழோசையில் கருத்து வெளியிட்ட பொருளாதார ஆய்வாளர் முத்துகிருஷ்ண சர்வானந்தா,

30 ஆண்டு காலமாக இருந்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகளுமாகச் சேர்ந்து இலங்கை அரசாங்கத்தை இந்தளவுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

இலங்கையில் பல்வேறு அரச துறைகளும் நிறுவனங்களுமே கோடிக் கணக்கான ரூபாய் மின் கட்டண பாக்கி வைத்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தவிர இலங்கையிலே பெரிய பெரிய நிறுவனங்கள்கூட மின்சாரத்தை திருடுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை முழுவதுமாக அரச கட்டுப்பாட்டில் இருக்கும்வரை இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று தான் நம்புவதாக அவர் கூறினார்.

தற்போதைய மின் கட்டண அதிகரிப்பு இலங்கை மின்சார சபையை பகுதியளவிலாவது தனியார் மயமாக்க வேண்டும் என்ற வாதத்தை மக்கள் மத்தியில் உருவாக்கும் என்று தான் கருதுவதாக பொருளாதார ஆய்வாளர் முத்துகிருஷ்ண சர்வானந்தா தெரிவித்தார். (செ-11)

# மரண அறிவித்தல்

## சதாசிவம் கந்தையா தம்பித்துரை



இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பித்துரை நேற்று (18.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை செல்லம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் துரைராசா, முத்துப்பிள்ளை, இராசா, காலஞ்சென்ற ஞானம்மா மற்றும் சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன் (ஐங்கரன் களஞ்சியம், கொட்டக்கலை) விசியா, திருநாவுக்கரசு (அசோகன்-கனடா), கெங்காதரன் (அப்பன்), வனஜா (ஜேர்மனி), ஜோதிகா, குபேந்திரன் (டோகா), அஜந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்மதி, கிருபாகரன் (மதுவரி பொறுப்பதிகாரி - சங்கானை), அனுஷியா (கனடா), குமுதினி, ரவீந்திரன் (ஜேர்மனி), மகேந்திரன், சிவகாமி, சுஜீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பராசக்தி, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், விதுஷிகன், அபிஜா, சரவணன், சிவாகர், பவித்திரன், சாயித்தியா, இலக்கியன், சதுர்ஜன், அக்ஷயன், சிந்துஜன், ராகவி, அபர்ணன், நிர்ணயா, பிரதிக்ஷா, சானியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாப்பாத் தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர் [illegible]
021 224 1764

(சி-3045)

## தமிழர் ஆயுதம் ஏந்த...

அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர் இலங்கையிலிருந்து டென்மார்க் சென்றிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை தொடர்பில் மாநாட்டில் கலந்து கொண்டோருக்கு எடுத்து விளக்கினார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின் 22-வது அமர்வில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஏன் தமிழ் மக்களுக்குப் பிரயோசனமற்றது? அது தமிழர்களின் அபிலாசைகளை எவ்வாறு புறக்கணித்துள்ளது என்பதையும் எடுத்து விளக்கியதுடன், தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைப்பதற்கு சர்வதேசம் ஆற்ற வேண்டிய பங்களிப்புக் குறித்து விளக்கமளித்தார்.

இலங்கையில் தமிழர்களின் பொருளாதாரமும் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுவதுடன், கட்டமைப்புசார் இன அழிப்பின் அங்கமாக வடக்கில் மேற்கொள்ளப்படும் சிங்களமயமாக்கல் மற்றும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகளையும் அவையினருக்குத் தெரியப்படுத்தினார். தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புசார் இன அழிப்பே, தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தது என்ற கருத்தை அவர் அங்கு உறுதிபடத் தெரிவித்தார்.

இதேவேளை, நீண்டகாலமாக தொடரும் இன முரண்பாட்டிற்கு, நிலையானதும், நியாயமானதுமான தீர்வை காண்பதற்கான அடிப்படையாக, தமிழர் தாயகத்தில் விரைவான இடைக்கால நிர்வாக பொறிமுறை யொன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். அத்தகைய ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவதன் ஊடாக, இன அழிப்பின் சாட்சிகளாக உள்ளவர்கள், அச்சமற்று சுதந்திரமாக சாட்சியம் அளிக்க உகந்த சூழல் உருவாகும் எனவும் குறிப்பிட்டார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
**பயிற்சிப்பட்டறை**
யாழ்.நகரில் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும்.
(9.00-12.00)
தொடர்பு: 0777822014
www.cse.lk



## இலவச கணனிப்பயிற்சி வகுப்புக்கள்

Little Aid
CHARITY NR 1129695
2nd Batch

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும்
லிட்டில் ஏய்ட் நிறுவனம் கிளிநொச்சி நகரில் நடாத்தும்

## இலவச கணனிப்பயிற்சிக் கல்லூரி

**Diploma in Computer Application**
(Information Technoloy, Ms Word, Ms Excel, Ms Power Point, Ms Access, HTML, Internet & Email, Photoshop)

- வயது வேறுபாடின்றி அனைவரும் பங்குபற்றலாம்
- இலவசப் புத்தகங்கள் மற்றும் கையேடுகள்
- வார, வார இறுதி வகுப்புக்கள்

பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள்
பிரித்தானியாவிலிருந்து லிட்டில் ஏய்ட் நிறுவனத்தால் வழங்கப்படும்

ஆரம்பம் - 20-04-2013 சனி காலை 9 மணி
இடம்: கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி
மேலதிக விபரங்களுக்கு
077 4700468



## மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

Welders 20பேர் உடனடியாக தேவை. ஒட்டுநர் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களா? நீங்கள் அப்படி என்றால் ஒட்டுநர் துறையில் அதி உயர் சம்பளத்துடன் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக தயாராகுங்கள். 3 வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் LANKA VOICE நிறுவனத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.
மேலதிக விபரங்களுக்கு: 077 6439204
(சி-3014)



## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உடனடி பயணம் | இலவசம்

சவுதி இராட்சியத்தில் ஜித்தா,
நகரங்களில் வேலை செய்வதற்காக
நகர சுத்தம் செய்பவர்கள் (உள்ளேயும், வெளியேயும்)
**CITY CLEANERS** (INDOOR & OUTDOOR)
FREE | FREE
வயது 21-38 இடையில் — சம்பளம் ரியால் 800 + பகுதி நேரம்
எவ்வித தொழில் அனுபவமும் தேவையில்லை. — ரூபா. 28, 000 + பகுதி நேரம்
Embassy விசா முத்திரை கட்டணம் SLBFE காப்புறுதி கட்டணம் மாத்திரம் அறிவிடப்படும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.
வவுனியாவில் தொடர்புகளுக்கு: LANKA VOICE
No.: 24, Station Road, Vavuniya. 0770584658
(சி-3035)


## எகிறிய...

0-120 வரையான கட்டணம் அலகிற்கு 15 ரூபாயாகவும், 0-180 வரையான கட்டணம் அலகிற்கு 20 ரூபாயாகவும், 0-210 வரையான கட்டணம் அலகிற்கு 24 ரூபாயாகவும், 0-300 வரையான கட்டணம் அலகிற்கு 26 ரூபாயாகவும், 300 அலகிற்கு மேற்பட்ட கட்டணம் அலகிற்கு 32 ரூபாயாகவும் அதிகரிக் கப்பட்டுள்ளது.

முதல் 30 அலகுகளுக்கும் 25 வீத எரிபொருள் சீராக்கல் கட்டணமும், 60 வரையான அலகுகளுக்கு 35 வீத எரிபொருள் சீராக்கல் கட்டணமும் 90 அலகிற்கு மேற்பட்ட கட்டணங்களுக்கும் 40 வீத சீராக்கல் கட்டணமும் அறவிடப்படவுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

மதஸ்தலங்களுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க அனுமதித்துள்ள போதும் மின்சார சபை சமர்ப்பித்த 2013-ம் ஆண்டுக்கான செலவு மதிப்பீட்டை 40 பில்லியனால் குறைக்கவும் மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது. (செ-11)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணசந்திரோதயம் பத்மநாதன்



(இளைப்பாறிய உப அதிபர் யா/ புலோலி மெ.மி.த.க பாடசாலை, புலோலி)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணசந்திரோதயம் பத்மநாதன் (இளைப்பாறிய உப அதிபர் யா/புலோலி மெ.மி.த.க பாடசாலை, புலோலி) 17.04.2013 அன்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய நிர்வாக அதிகாரி (இல்ங்கை புகையிரத திணைக்களம்) கதிரவேற்பிள்ளை பத்மநாதனின் அன்பு மனைவியும், கதிரவேல்( நியூசிலாந்து), றோகினி( உதவிக் கல்விப் பணிப்பாளர் -விஞ்ஞானம் வலயக் கல்வி அலுவலகம்,வடமராட்சி), சாந்தினி(டுபாய், நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சோ.கருணேஸ்வரன்-(அதிபர்-யாக்கரு விநாயகர் வித்தியாலயம்), வே.காசிநாதன்(டுபாய்), தா.சிவகுமார், க.சிவரஞ்சினி(நியூசிலாந்து) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்: மகள் திருமதி றோகினி கருணேஸ்வரன் -உதவிக் கல்விப் பணிப்பாளர் -விஞ்ஞானம் வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.**

(சி-3033)


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English With Grammar - Quick Learning Course** *(1½ Months)*
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Diploma in English** *(2 Months)*
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி. உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி
ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர். மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன்
IELTS-4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission
இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

Batch I - 20.04.2013 Batch II - 22.04.2013 Batch III - 27.04.2013 Batch IV - 29.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074



## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்

**பெற்றோர்கள் / மாணவ, மாணவிகளின் கவனத்திற்கு**

பட்டப்படிப்பிற்கு தகுதியில்லை எனக் கவலை வேண்டாம். DIPLOMA/ ADVANCED DIPLOMA தராதரத்தை 1 வருட காலத்திலும் பட்டப்படிப்பு B.Eng(Hons) 1 வருட காலத்திலும் பயின்று நீங்களும் ஒரு CHARTERED ENGINEER ஆகலாம்

City & Guilds Dec.2013

CIVIL ENGINEERING | ELECTRICAL & ELECTRONICS
QUANTITY SURVEYING | TELECOMMUNICATION
MECHANICAL | MOTOR VEHICLE

- Diploma / Ad. Diploma சித்தியெய்தியதும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்
- Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு Industrial Training கொடுக்கப்படும்.

DEC.Exam ற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது எதிர்வரும் 20, 21ம் திகதிகளில் APSS நிறுவனத்தின் பிரமுகர்கள், விரிவுரையாளர்களை கிளை நிறுவனத்தில் சந்தித்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**APSS INTERNATIONAL**
No.35, Nelson Place, Colombo 06. Tel: 011 2361587
Hotline: 077 2306642 |072 2306642 | 077 3867695

Jaffna
Annavaasa, 242,Dr.Subramaniam Rd,
Chunnakam,
Tel - 077 2306642 /077 3867695



சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம்
நடாத்தும்

## சங்கமம் - 2013

### 1ம் ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும்



இடம் : கைலாசபதி கலையரங்கு - யாழ்/பல்கலைக்கழகம்
காலம்: 20.04.2013 சனிக்கிழமை மாலை 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.